REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2024 ஏப்ரல் 25 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 98 | Thursday 25, April, 2024 | 16 பக்கங்கள் | 50/-





# 'உமா ஓயா' திட்டம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு



## இலங்கை - ஈரான் ஜனாதிபதிகளால் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பம்



மகாவலி திட்டத்துக்கு அடுத்தபடியாக இலங்கையின் பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக இலங்கை வரலாற்றில் இடம்பெறும் 'உமா திய ஜனனி' பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் நேற்று (24) இலங்கை மற்றும் ஈரான் ஜனாதிபதிகளால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் நிகழ்வுக்கு வருகை தந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. இருநாட்டு தலைவர்களும் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து 'உமா திய ஜனனி' பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை மக்களிடம் கையளித்ததுடன், டிஜிட்டல் தொழில்நுட்ப முறையின் ஊடாக மின் உற்பத்தி இயந்திரங்களை இயக்கி பணிகளை ஆரம்பித்து வைத்தனர். உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் அவரது பாரியார் ஜெமீலே சதாத் அல மோல்ஹூதா உள்ளிட்ட குழுவினர் நேற்று (24) காலை மத்தல விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

இதன்போது ஈரான் ஜனாதிபதி தலைமையிலான குழுவினருக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. 2008 ஏப்ரல் மாதத்தில் அப்போதைய ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நெஜாட்டின் இலங்கை விஜயத்துக்கு பின்னர் ஈரான் ஜனாதிபதியொருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

தனது வருகையை குறிக்கும் வகையில் ஈரான் ஜனாதிபதி மத்தல விமான நிலையத்தில் உள்ள விருந்தினர் குறிப்பேட்டிலும் பதிவிட்டார். உமா ஓயா நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, அலி சப்ரி, மஹிந்த அமரவீர, கஞ்சன விஜேசேகர, இராஜாங்க

06

## ஈரானுடனான தொடர்புகளை பலப்படுத்தி முன்னோக்கி கொண்டு செல்வதே நோக்கம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

ஈரானின் ஆதரவின்றி இலங்கையால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவுக்கு நீரை கொண்டு சென்றிருக்க முடியாது. அதற்காக ஈரான் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும், ஈரானுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்வதே நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். உலகின் தென்துருவ நாடுகள்



தமது தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட விரும்புவதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அதற்காக தென்துருவ நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இன்று இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பை ஏற்ற ஈரான் ஜனாதிபதிக்கு நன்றி

06

## இலங்கையின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு கைகொடுக்க தயார்

### ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி

உமா ஓயா பல் அபிவிருத்தி திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் மட்டுமல்லாது, ஆசிய வலய நாடுகளுக்கு இடையேயான அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கான அடையாளமாகுமென ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி தெரிவித்தார்.

இலங்கையுடன் சிறந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல தயாரென உறுதியளித்த ஈரான் ஜனாதிபதி, இலங்



கையின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவத் தயாரெனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பங்கேற்குமாறு தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்காக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை

06

## இலங்கை - ஈரானுக்கு இடையே ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

ஈரானுக்கும் இலங்கைக்குமிடையே இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் நேற்று இரு நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.



இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்ட ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இலங்கையின் திரைப்படத் துறையின் மேம்பாட்டுக்காக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கும் ஈரான் இஸ்லாமிய குடியரசின் கலாசார மற்றும் இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சுக்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலில் கைச்சாத்திடப்பட்டது.

ஊடக மற்றும் சுற்றுலாத் துறையில் அபிவிருத்திக்காக

06

## பால்மாவின் விலைகள் இன்று முதல் குறைப்பு



இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை இன்று முதல் குறைக்கப்படவுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ பால் மா பக்கட்டின் விலை 250 ரூபாவினால் குறைக்கப்படுவதுடன், 400 கிராம் பால் மா பக்கட்டின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளதாக, அச்சங்கம் மேலும் தெரிவித்தது.



03 புதிய பாராளுமன்ற உறுப்பினராக வீரசேன கமகே சத்தியப்பிரமாணம்






### பொசன் பௌர்ணமி தினத்துக்கு முன்

## அநுராதபுரம்வரை ரயில் சேவை நடத்துவது சாத்தியம் இல்லை

### அட்டமஸ்தானாதிபதிக்கு அமைச்சர் பந்துல அறிவிப்பு

வடக்கு ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பொசன் பௌர்ணமி தினத்துக்கு முன்னர் அநுராதபுரம் வரையான ரயில் சேவையை ஆரம்பிக்க முடியாதுள்ளதாக அட்டமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்தன தேரருக்கு

06



## தமிழரசு கட்சி தொடர்பான வழக்கு மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்தார்.

இந்த வழக்கு நேற்று (24) திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

06

## ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்

### மரணத்துக்கு பயந்தவன் நானல்ல

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவது உறுதியென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று தெரிவித்தார்.

06



## தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் அரசு உறுதி



தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் உறுதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான

06

## ஸ்ரீல.சு.க. தலைவராக செயற்பட மைத்திரிக்கு இடைக்கால தடை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு தடை விதித்து கொழும்பு பிரதான மாவட்ட நீதவான் சந்துன் விதானகே நேற்று (24) இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தார்.

ஸ்ரீல.சு. கட்சியின் செயற்குழு உறுப்பினரும் கலாசார அமைப்பாளருமான முண்டிகு சரச்சந்திர, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

06

### தோட்டத் தொழிலாளர் சம்பள விடயம்

## சம்பள நிர்ணய சபை உடனான 02ஆவது கூட்டமும் புறக்கணிப்பு

### பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு சுரேஷ் MP கண்டனம்

பெருந்தோட்ட தொழிலாளரின் சம்பள உயர்வு தொடர்பாக சம்பள நிர்ணய சபை நேற்று இரண்டாவது தடவையாகவும் கூடிய போதும் பெருந்தோட்ட நிறுவனங்கள் இச்சம்பள நிர்ணய சபையின் கூட்டத்தை புறக்கணித்துள்ளன. மூன்றாவது தடவையாகவும் கூட்டத்தை புறக்கணித்தால் நாட்டில் தொழில் சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை

06



# நகர்வலம்



## இந்திய உதவியின் கீழ்...

# நிர்மாணிக்கப்பட்ட மேலும் 04 கிராமங்கள் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படும்

இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மேலும் 04 கிராமங்கள் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கொழும்பு, இரத்தினபுரி, திருகோணமலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கிராமங்களே இவ்வாறு திறந்து வைக்கப்பட உள்ளன.



இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வரும் 101 கிராமங்களில் 07 கிராமங்களில் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இதனால் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, கண்டி, வவுனியா, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, 90 கிராமங்களில் 1,668 வீடுகள் கட்டும் பணி இதுவரை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 732 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் 04 வீடமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய மட்டத்திலான வீடமைப்புத் திட்டம் தென் மாகாணம், கிராம சக்தி வீட்டுத் திட்டம், வடக்கு மாகாணம், கிராம சக்தி வீட்டுத் திட்டம், அம்பாந்தோட்டை மாவட்டம் ஆகிய நான்கு திட்டங்களாகும். இத்திட்டத்தின் கீழ் ஒரு திட்டத்திற்கு 600 வீடுகள் என்பதோடு மொத்தமாக 2400 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்காக இந்திய அரசால் ஒதுக்கப்பட்ட தொகை 2400 மில்லியன் ரூபாவாகும்.

ஏற்கனவே 807 மில்லியன் ரூபா இதற்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1592.7 மில்லியன் ரூபா இந்திய அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தவிர, அநுராதபுரம், மஹாவிலச்சிய, அலபத் கிராமம், பூஜ்ய மாதுருவாவில் உள்ள சோபித நினைவு கிராமத்திற்கும் இந்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 450 மில்லியன் ரூபாவாகும். இக்கிராமத்தில் கட்டப்பட உள்ள வீடுகளின் எண்ணிக்கை 115 ஆகும். அரசாங்க நிதியில் 25 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 90 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவிக்கிறார்.

இதேவேளை, இந்திய உதவியின் கீழ் தோட்டபுற வீடமைப்புத் திட்டத்தின் அடிப்படைப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. இதன்படி, 8445 தோட்டபுற வீடுகளை நிர்மாணிப்பதற்காக இந்திய அரசாங்கம் 23,646 மில்லியன் ரூபாவை வழங்கும் என அமைச்சர் தெரிவித்தார்.



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் மகா சமாதி தின ஆராதனா மகோற்சவம், சாயி மத்திய நிலைய தலைவர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் 24ஆம் திகதி கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது, பிரசாந்தி கொடியேற்றம், யாகபூஜை மற்றும் கலசாபிஷேகம் என்பனவும் நடைபெற்றன.

# அநுராதபுரம் இலங்கை வங்கிக் கிளையின் கூரை உடைத்து பணம் திருட முயற்சி

## சந்தேக நபர்களை தேடி பொலிஸார் வலைவிரிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் பொது வர்த்தக வளாக கட்டடத்திற்கு அருகில் அமைந்துள்ள இலங்கை வங்கி நகர கிளையினை உடைத்து பணக் கொள்ளையில் ஈடுபட முயற்சித்த நபர்களை தேடி கைது செய்வதற்கு அநுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திலின ஹேவ பத்திரனவின் ஆலோசணையின் கீழ் பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரம் இலங்கை வங்கி நகர கிளையின் கூரை கடந்த (23) இரவு உடைக்கப்பட்டு உட்புகுந்து அங்கிருந்த பெட்டகம் உடைக்கப்பட்டு பணத் திருட்டை மேற்கொள்ள எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் தெரிவித்தனர். தனி நபர் அல்லது ஒரு குழுவினர் வங்கி கட்டட கூரையை உடைத்து கையிற்றின் உதவியுடன் உட்புகுந்து கிரைண்டர் மற்றும் சுத்தியல் போன்ற உபகரணங்களை பயன்படுத்தி பெட்டகம் உடைக்கப்பட்டுள்ளதுடன் அங்கிருந்த சமிக்ஞை அழைப்பு செயல்பட்டதன் காரணமாக கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர். உடைக்கப்பட்டுள்ள பெட்டகத்தில் பணம் இருக்கவில்லையென பொலிசார் தெரிவித்தனர்.

# புத்தளம் கல்வி வலயத்தில் சித்திரப்பாட கருத்தரங்கு

**புத்தளம் தினகரன் நிருபர்**



கல்பிட்டி வீதி நாயக்கர்சேனை, தேத்தாப்பளை, நாவற்காடு, மாம்புரி மற்றும் நரக்களி பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப்பாட கருத்தரங்கு அண்மையில் நரக்களி பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. புத்தளம் கல்வி வலயத்தின் சித்திரப்பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகரும் நாடறிந்த ஓவியருமான கலாநிதி எம்.எம்.முஹம்மத் இக்கருத்தரங்கில் பிரதான வளவாளராக கலந்து கொண்டார். கிராமப்புற பாடசாலைகளின் மாணவர்களுக்கு இவ்வாறான கருத்தரங்கினை ஏற்பாடு செய்தமை தமக்கு மேலும் உற்சாகத்தை அளித்துள்ளதாகவும் இதனை ஏற்பாடு செய்த புத்தளம் வடக்கு கோட்டத்துக்கான பிரதி கல்விப் பணிப்பாளர் அஸ்காவுக்கு மாம்புரி ரோமன் கத்தோலிக்க சிங்கள தமிழ் மகா வித்தியாலய பிரதி அதிபர் மெரிய லாவுஸ் மேர்ஸி நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை – பாகிஸ்தான் நட்புறவு

# சங்க முன்னாள் தலைவர் இப்திகார் அஸீஸ் காலமானார்

## பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அனுதாபம்

இலங்கை பாகிஸ்தான் நட்புறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் இப்திகார் அஸீஸ் (24) நேற்று காலமானார். அவரின் மறைவையொட்டி கொழும்பில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகராலயம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) ஃபஹீம் உல் அஸீஸ்; இப்திகார் அஸீஸின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அதில், இப்திகார் அஸீஸ், பாகிஸ்தானின் சிறந்த நண்பராக இருந்ததோடு இலங்கை பாகிஸ்தான் நட்புறவை மேம்படுத்துவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் என்றும் நினைவு கூரப்படக்கூடியவை. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கான அவரது சேவைகளை பாராட்டும் வகையில், பாகிஸ்தான் அரசாங்கம் 2016 செப்டம்பர் மாதத்தில் "தம்கா இகித்மத்" என்ற மதிப்புமிக்க பட்டத்தை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் நடைபெற்ற மர்ஹூம் ஏ.எல்.எம். இப்ராஹீமின் நினைவுப் பேருரை நிகழ்வு












**(அஷ்ரப் ஏ சமத்)**

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னாள் அமீர் பன்னூலாசிரியர் மௌலவி மர்ஹூம் ஏ.எல்.எம். இப்ராஹீம் அவர்கள் பற்றிய நினைவுப் பேருரை (23) செவ்வாய்க் கிழமை காலை 09.00 முதல் 12.30 மணிவரை கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

ஜமாஅத்தின் தற்போதைய அமீர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். உஸைர் (இஸ்லாஹி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுரைகளை ஜம்இய்யாவின் முன்னாள் தலைவர் அஷ்ஷெய்க் ஹஜ்ஜுல் அக்பர், பேராசிரியர் பி.ஏ. ஹுஸைன்னியா, மு.கா தலைவர் ரவுப் ஹக்கீம் எம்.பி, ஜம்இய்யத்துல் உலமா செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூர்ஆமித், ருஹுனு பல்கலைக்கழக பேராசிரியர் தம்மிக்க ஜயசிங்க, உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்வியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள் உட்பட பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்தனர்.



# அஹதிய்யா சம்மேளன நிர்வாக குழுக்கூட்டம்

அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தின் 20ஆவது நிருவாகக் குழுக் கூட்டம் தேசிய தலைவர் எம்.ஆர்.எம். ஸரூக் தலைமையில் இரத்மலானையில் அமைந்துள்ள நெஸ்ட் அகடமி பயிற்சி கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது தேசிய இடைநிலை சான்றிதழ் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள், அஹதிய்யா பாடசாலைகளின் புனரமைப்பு, புதிய அஹதிய்யா பாடசாலைகளை பதிவு செய்தல், 2024ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டவுள்ள அஹதிய்யா தேசிய இடைநிலை சான்றிதழ் உள்ளிட்ட பலவிடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. இக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் எம்.எம்.எம்.பாஹிம், தேசிய பொருளாளர் எம்.எச்.எம். உவைன், தேசிய பிரதித் தலைவர்களான பாரூக் பதீன் ஆசிரியர், ஏ.எல்.எம். அஸ்வர், உப செயலாளர் அஷ்ஷேய்ஹ் யூஎல். றிபாய்தீன், ஹிஷாம் எம்.ஸுஹைல் அஷ்ஷேய்ஹ் அக்ரம் ஜுனைத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குழு மோதல்; ஒருவர் கத்திக்குத்தில் பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறி, அடுத்த தரப்பில் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னேரிய பொலிஸ் பிரிவின் ஹேனயாய பகுதியில் நேற்று முன்தினம் (23) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். மின்னேரிய ஹேனயாய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 39 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 26,34 வயதுடைய மின்னேரிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரிய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோ. சைக்கிள் விபத்து

## ஓட்டுனர் சம்பவயிடத்தில் பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டையிழந்து மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் சம்பவயிடத்திலேயே உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் விமான நிலைய வீதியின் இசுறுபுர பகுதியில் 23 ஆம் திகதி மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். அநுராதபுரம் நெலுங்குளம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 47 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN தினகரன்

2024 ஏப்ரல் 25 வியாழக்கிழமை




தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 12
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க அமைச்சரவை பத்திரம்

## விரைவில் சமர்ப்பிக்கப்படுமென்கிறார் அமைச்சர் சுசில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

அத்துடன் ஆசிரியர் கல்வி சேவை, அதிபர்கள் சேவை, கல்வி நிர்வாக சேவை, ஆசிரியர் ஆலோசனை சேவை உள்ளிட்ட சேவைகளிலும் சம்பள முரண்பாடு காணப்படுவதாக தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டு பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சின் இணக்கப்பாட்டுடன் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

அதேவேளை ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காணப்பட்டு விட்டதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் வெளியிட்ட தகவல் தவறானதென்றும் அவ்வாறான தகவலை வெளியிடுவதற்கு அவருக்கு அதிகாரம் கிடையாது என்றும் தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் அவரிடம் விளக்கம் கோரியுள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கு சம்பள முரண்பாடு கிடையாது. அவர்களுக்கான சம்பள முரண்பாடு தீர்க்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வெளியிட்ட தகவல் நாட்டிலுள்ள 02 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் மற்றும் அதிபர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அது தொடர்பில்

06

# 5,000 ரூபா இலஞ்சம் பெற முற்பட்ட புத்தளம் காதி நீதிமன்ற நீதிபதி கைது

## மே 06 வரை விளக்கமறியல்

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

புத்தளம் காதி நீதிமன்ற நீதிபதி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

5,000 ரூபாவை இலஞ்சமாக பெற முற்பட்ட போது இவர் புத்தளம் காதி நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து நேற்று முன்தினம் (23) மாலை கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. புத்தளம், வெட்டாளை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பெண்ணின் விவாகரத்து வழக்கு தொடர்பில் விவாகரத்து சான்றிதழை வழங்குவதற்காக காதி நீதிமன்ற நீதிபதி, தன்னிடம் 5,000 ரூபாவை இலஞ்சமாக கேட்டுள்ளாரென அப்பெண் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவம் இடம்பெற்ற நேற்று முன்தினம் (23) மாலை புத்தளம் காதி நீதிமன்றத்துக்கு வருகை தந்த பெண், காதி நீதிபதி கேட்ட 5,000 ரூபா பணத்தை அவரிடம் கொடுத்த போதே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் மே 06 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## சிறைத்தண்டனை காலம் குறித்து

# குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்ய விரைவில் நடவடிக்கை

## நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

குற்றம் ஒன்றுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கும் போது அவர் விளக்கமறியலிலிருந்த காலத்தையும் உள்ளடக்கியதாக அந்த தண்டனைக்காலம் அமைய வேண்டுமென்ற வகையில் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படுமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

10 ஆண்டுகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு நீதிமன்றம் 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கும் போது அவர் விளக்கமறியலிலிருந்த காலமும் தண்டனைக் காலமாக கணிக்கப்பட வேண்டுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதற்காக குற்றவியல் நடவடிக்கை சட்டத்தில் காணப்படும் குறைகள் திருத்தம் செய்யப்பட்டு, சந்தேக நபர் ஒருவருக்கு தீர்ப்பளிக்கும் போது அவர் விளக்கமறியலில் இருந்த காலத்தையும் கவனத்திற்கொண்டு தண்டனைக்காலத்தை குறைக்கவும் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"1979 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் 185,203 மற்றும் 238 ஆகிய பிரிவுகள் திருத்தம் செய்யப்படவுள்ளன. பழமையான இந்த சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் ஏதேனும் குற்றத்துக்காக மாதக்கணக்கிலும், வருடக்கணக்கிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதன் பின்னர் அந்த நபருக்கு தண்டனை வழங்கப்படும் போதுதண்டனை வழங்கப்படும் தினத்தில் இருந்து அந்த தண்டனைக் காலம் அமுல்படுத்தப்படுகிறது. இதில் திருத்தம் அவசியம்.



இவ்வாறு இடம்பெற்ற ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும். நபர் ஒருவர் சந்தேக நபர் என்ற அடிப்படையில் 10 வருடகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அவருக்கு 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை என தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த வகையில் அந்த நபருக்கு 28 ஆண்டு காலம் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இது நியாயமற்றது.

சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள சகல கைதிகளுக்கும் இவ்வாறான அநீதி இழைக்கப்படுகிறது. இந்த சட்டங்கள் நடைமுறைக்கு சாத்தியமான வகையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு தண்டனை வழங்கும் போது அவர் விளக்கமறியலில் இருந்த காலத்தையும் நீதிமன்றம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

அத்துடன் பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்குள்ளான நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர்களுக்கு தீர்ப்பு வழங்கும் போது பாதுகாப்பு உள்ளிட்ட இதர விடயங்களை கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதற்கான விதிமுறைகளும் சட்டத் திருத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இடைக்கால திருத்தம் வெகுவிரைவில் முன்வைக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

# புதிய பாராளுமன்ற உறுப்பினராக வீரசேன கமகே சத்தியப்பிரமாணம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் புதிய உறுப்பினராக வீரசேன கமகே நேற்று (24) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அநுராதபுர மாவட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் கே.எச்.நந்தசேன காலமானமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கே வீரசேன கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசிய மக்கள் சக்தி – ஐக்கிய மக்கள் சக்தி இடையே விவாதம் நடத்த தயார்

## இலங்கை சட்டக் கல்லூரி மாணவர்

தேசிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் விவாதம் நடத்த தமது சங்கம் தயாராக உள்ளதாக, இலங்கை சட்டக் கல்லூரி மாணவர் சங்கத் தலைவர் நவோத் ரத்னசேகர தெரிவித்தார். இவ்விவாதத்தை சட்டக் கல்லூரி வளாகத்தில் நடத்துவதற்கும் அதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கும் விருப்பம் தெரிவித்து அக்கட்சிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், அவர் கூறினார். தேசிய மக்கள் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் கட்சிக்கும் இடையில் நடைபெறவுள்ள விவாதத்தை சட்டக் கல்லூரியில் நடத்துமாறு இவ்விரு கட்சிகளின் தலைவர்களிடமும் தமது சங்கம் முன்மொழிந்துள்ளது.



இவ்விவாதத்தினூடாக இலங்கை எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்ள தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் முன்வைக்கும் பொருளாதார கொள்கைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வாய்ப்புள்ளதாகவும், அவர் மேலும் குறிப்பிட்டார்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ.100,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

10.75%2028 'A' தொடர்களின் கீழ் ரூ.25,000 மில்லியனையும் 11.00%2030 'A' தொடர்களின் கீழ் ரூ.30,000 மில்லியனையும் 9.00%2032 'A' தொடர்களின் கீழ் ரூ.45,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 ஏப்ரல் 29 ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 10.75%2028'A' | 11.00%2030 'A' | 09.00%2032 'A' |
|---|---|---|---|
| ISIN* | LKB01028C151 | LKB01530E152 | LKB02032J017 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 25,000 மில்லியன் | ரூ. 30,000 மில்லியன் | ரூ. 45,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 10.75% ஆண்டொன்றிற்கு | 11.00% ஆண்டொன்றிற்கு | 9.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2018 மார்ச் 15 | 2015 மே 15 | 2012 ஒக்டோபர் 01 |
| முதிர்வுத்திகதி | 2028 மார்ச் 15 | 2030 மே 15 | 2032 ஒக்டோபர் 01 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 மார்ச் & 15 செப்டெம்பர் | 15 மார்ச் & 15 நவம்பர் | 01 ஏப்ரல் & 01 ஒக்டோபர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 1.4022 | ரூ. 100.00 இற்கு ரூ. 5.1071 | ரூ.100 இற்கு ரூ. 0.7623 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 ஏப்ரல் 29, திங்கட்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 ஏப்ரல் 29, திங்கட்கிழமை, மு.ப.11.00 மணி | | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 மே 02 | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (இறுதி நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்கள்/ஐஎஸ்ஐஎன் தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி, முன்வைக்கப்படுகின்ற தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை ஏற்றுக்கொள்ளக்கூடும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும்
வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்,**
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**





தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 16



**குறள் தரும் சிந்தனை**

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற

*அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளைவிட இல் வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை.*

# இலங்கை - ஈரான் நட்புறவை வலுப்படுத்தும் திட்டம்

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் மற்றொரு பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டம் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாகும். இத்திட்டமானது இந்நாட்டின் விவசாயம் மற்றும் மின்னுற்பத்தி துறைகளை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் பங்களிக்கக் கூடியது.

இலங்கையின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த அபிவிருத்தித் திட்டத்தை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்றாஹிம் ரைசியும் இணைந்து உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து மக்கள் பாவனைக்காக கையளித்திருக்கின்றனர்.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் நீண்டகாலம் நிலவிவரும் சிநேகபூர்வ நட்புறவின் பிரதிபலனாக கிடைக்கப்பெற்றுள்ள இந்த பாரிய அபிவிருத்தித் திட்டம், இந்நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிக்கும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இந்த உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்திற்காக 2007 நவம்பர் 27 ஆம் திகதி இலங்கையின் கனிய வள அபிவிருத்தி அமைச்சும் ஈரானின் வலுசக்தி அமைச்சும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. அதனடிப்படையில் இத்திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு ஈரானின் பராப் நிறுவனத்திடமும் இலங்கையின் அன்றைய நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சிடமும் ஒப்படைக்கப்பட்டது.

அதற்கேற்ப பராப் நிறுவனம் விரிவான சாத்தியக் கூற்று ஆய்வுகள், பொறியியல் திட்டமிடல் பொருட்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்தது. அதனைத் தொடர்ந்து 514 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த அபிவிருத்தி ஒப்பந்தத்தின் கீழான பணிகள், 2010 மார்ச் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்ததோடு, 2015 மார்ச் 15 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எ

ஈரான் தொடர்ந்தும் நிதியளிப்பதில் எதிர்கொண்ட தடைகள், ஹெட்ரஸ் சுரங்கப்பாதையில் எதிர்பாராத விதமான தண்ணீர் பிரவேசித்ததால் ஏற்பட்ட தொழில்நுட்ப சிக்கல் உள்ளிட்ட பல்வேறு சவால்களை இந்த அபிவிருத்தித் திட்டம் எதிர்கொண்டது. அதன் விளைவாகவே இத்திட்டத்தை 2024 மார்ச் 31 வரை நீடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இத்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு இலங்கை மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஊடாக இருநாட்டுக்கும் இடையிலான நட்புறவு மேலும் வலுவடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த பல்நோக்கு திட்டத்தின் ஊடாக மொனறாகலை மாவட்டத்தில் 4,500 ஹெக்டேயர் புதிய விவசாய நிலங்களும் தற்போதுள்ள 1,500 ஹெக்டேயர் விவசாய நிலங்களும் நீர்ப்பாசன வசதியைப் பெற்றுக்கொள்ள இருக்கின்றன. அத்தோடு பதுளை, மொனறாகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் குடிநீர் மற்றும் தொழிற்சாலை நீர்த்தேவைகளுக்கு 39 மில்லியன் கனமீற்றர் நீரை வழங்கக்கூடியதாக இருக்கும். மேலும் இத்திட்டத்தின் ஊடாக வருடாவருடம் 290 ஜிகாவாட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படும்.

இவ்வாறு பாரிய பிரதிபலன்களை இலங்கை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் இத்திட்டம் புஹுல்பொல மற்றும் டயரபா உள்ளிட்ட இரு நீர்த்தேக்கங்களை இணைக்கும் 3.98 கிலோ மீற்றர் நீளமான நீர்ச்சுரங்கம் (இணைப்பு சுரங்கப் பாதை), 15.2 கிலோ மீற்றர் நீளமான நீரோட்ட சுரங்கப் பாதை, நிலக்கீழ் மின்நிலையம், சுவிட் யார்ட், பயணப் பாதை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிர்மாணங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இத்திட்டமானது இலங்கையின் விவசாயத் துறையை மேலும் வலுப்படுத்தவும் மின்னுற்பத்தியை மேம்படுத்தவும் துணைபுரியும். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால சிநேகபூர்வ நட்புறவின் பிரதிபலனே அன்றி வேறில்லை. இலங்கையும் ஈரானும் அனைத்துத் துறைகளிலும் நெருக்கமான ஒத்துழைப்பைப் பேணி வருகின்றன.

அந்த வகையில் ஈரானின் அபிவிருத்தி உதவிகள் கடன் வடிவில் இலங்கைக்கு வழங்கப்படுகின்றன. குறிப்பாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள், நீர்ப்பாசனம் மற்றும் வலுசக்தி துறைகளை மேம்படுத்துதல் என்பவற்றில் ஈரான் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

அந்த வகையில் ஈரான் இலங்கைக்கு அளித்துள்ள கடன்களில் 19,301,572.6 அமெரிக்க டொலர்களை திருப்பி செலுத்தியுள்ள இலங்கை, 35,246,022.56 அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியும் உள்ளது.

இருந்த போதிலும் தற்போது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ள உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் இருநாட்டு வரலாற்றில் அழியாத்தடம் பதிக்கும் என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# விபுலாநந்த அடிகளார் துறவறம் பூண்டு 100 ஆண்டுகள் நிறைவு

## நூற்றாண்டு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஆரம்பம்

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு(1924_2024) நேற்றுமுன்தினம் (23.04.2024) ஆரம்பமாகியுள்ளது.

1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியன்று சுவாமிகள் தனது 32 ஆவது வயதில் பண்டிதர் மயில்வாகனன் என்ற நாமத்திலிருந்து விடுபட்டு காவியுடை தரித்து 'சுவாமி விபுலாநந்தர்' ஆகினார்.

கிழக்கின் காரைதீவு மண்ணில் 1982.03.27 ஆம் திகதி அவதரித்த சுவாமியின் வாழ்க்கையின் திருப்புமுனையான காலம் துறவறத்தின் பின்னராகும். மயில்வாகனன் என்ற நாமத்துடன் லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியாய், மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதராய் மேல்நாட்டு உடையுடன் கம்பீரமாக இருந்த கோலம் மாறி காவிஉடை தரித்து, தாமரை இலைமேல் நீர் போன்ற நிலைக்குள் வந்து துறவியாய் பிறப்பெடுத்த நாள் சித்திரா பௌர்ணமி தினத்தன்று ஆகும்.

சுவாமிகளை உலகம் போற்றும் பெருமகனாராக விளங்க வைத்தது இத்துறவு நிலை எனலாம்.

விஞ்ஞானம் படித்தவர் மெஞ்ஞானத்துள் மூழ்கினார். தமிழை மூச்சாக்கி வாழ்ந்தார். சமரச சன்மார்க்கத்தின் வழியில் பயணித்தார். சைவத்தைக் கைகளில் ஏந்தினார். 23 வருட துறவு வாழ்க்கை அவரை உலகின் உச்சத்திற்கு கொண்டு சென்றது. துறவறத்தின் பின்னர்தான் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசியரானார்.

இந்தியாவின் தமிழ்நாட்டில் தமிழ் அறிஞர்கள் பலபேர் இருந்தும், ஈழத்து மைந்தனை தமிழ்ப் பேராளுமையாக அண்ணாமலைச் செட்டியார் கண்டுகொண்டார்.

உலகியல் பற்றுக்களையும் அறுத்த சுவாமி மொழியில், சமயத்தில், கலாசாரத்தில், பண்பாட்டில், ஆராய்ச்சியில், சமூகத்தொண்டில், இசையில், நாடகத்தில் பற்றுக் கொண்டு வாழ்ந்தார்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முதல்தமிழ் பேராசிரியரான பின்னர் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராயும் அணி செய்தார் சுவாமி விபுலாநந்தர். இலங்கையில் பல பகுதிகளில் கல்விக்கூடங்களை நிறுவினார். ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றிவைத்தார்.



இலக்கியக் கட்டுரைகள், சமயசன்மார்க்கக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், மாநாடுகள் பலவற்றில் பேருரைகள், என்றுமே பயன்தரும்வகையில் நயமிக்க, பொருள் பொதிந்த கவிதைகள், கவிதை நூல்கள், என்று பல்துறைகளில் பன்முக ஆற்றல்களை வெளிப்படுத்திய காலம் முத்தமிழ் வித்தகரின் துறவுக்காலமேயாகும்.

அதனால்தான் அவருக்கு விழாக்கள் எடுக்கப்படுகின்றன. அவருக்குச் சிலை வடிக்கின்றார்கள். உலகெங்கும் இன்றும் போற்றுகின்றார்கள்.

**வி.ரி. சகாதேவராஜா**
ஆலோசகர்,
சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றம், காரைதீவு

# தமிழ் - முஸ்லிம் இனஉறவுக்கான பாலமாக திகழ்ந்தவர் எழுத்தாளர் மருதூர்க்கொத்தன்

## அன்னாரின் 19 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு கண்டியில் இன்று நூல் வெளியீடு

படைப்பாளிகள் பலர் தமது இலக்கியப்பிரதிகளை எழுதும்பொழுது இயற்பெயரை விடுத்து புனைபெயர்களில் அறிமுகமாவார்கள். பலர் தமது பிறந்த ஊருக்குப்பெருமை சேர்க்கும் வகையில் தமக்குத்தாமே ஊருடன் இணைந்த புனைபெயர்களை சூட்டிக் கொள்வார்கள்.

இலக்கிய வட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் புனைபெயரே நிலைத்துவிடும்.

கிழக்கு மாகாணத்தில் 'இஸ்மாயில்' என்ற பெயரில் ஒரு எழுத்தாளர் இருந்தார் எனச்சொன்னால் எவருக்கும் தெரியாது. மருதூர்க்கொத்தனையா சொல்கிறீர்கள் என்று அவருக்கு மிகவும் நெருக்கமான சிலரே குறிப்பிடுவார்கள். 1935 ஜூன் மாதம் 6 ஆம் திகதி அநுராதபுரத்தில் பிறந்த இஸ்மாயில் என்ற மருதூர்க்கொத்தன் 2004 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 19 ஆம் திகதி மறைந்தார். அவர் மருதமுனையில்தான் வாழ்க்கைத் துணையைப் பெற்றார்.

அவர் பயிற்றப்பட்ட ஆசிரியராக கல்விப்பணிக்கு வந்தார். தனது மனைவியின் ஊரான மருதமுனை ஊரின் பெயரையே முதன்மைப்படுத்தி கல்விப் பணியையும் இலக்கியப்பணியையும் தொடர்ந்த மருதூர்க்கொத்தன் எனக்கு அறிமுகமானது 1975 ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான்.

மருதூர்க்கொத்தனும் அவரது நெருங்கிய உறவினரான மருதூர்க்கனியும் (ஹனிபா) இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கிழக்கிலங்கையின் தூண்களாக விளங்கியவர்கள். 'மருதூர்க்கொத்தன் கதைகள்' என்ற தொகுதி 1985 ஆம் ஆண்டு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது இலங்கை வானொலியில் கலைக்கோலம் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தேன். தொகுதி கிடைத்தவுடனே படித்துவிட்டு நண்பர் ராஜஸ்ரீகாந்தனிடம் கொடுத்தேன். அவர் அதனைப் படித்துவிட்டு விமர்சனம் எழுதிக் கொண்டு இலங்கை வானொலி கலையகத்திற்கு வந்தார்.

அவரும் சிறந்த விமர்சன உரையை வானொலியில் பதிவுசெய்தார். அதனை மருதமுனையிலிருந்து செவிமடுத்த மருதூர்க்கொத்தன் நன்றி தெரிவித்து எனக்கு கடிதமும் எழுதினார்.

மருதூர்க்கொத்தனின் பாத்திரங்கள் சாதாரண மனிதர்கள். அவர்கள் கடின உழைப்பாளிகளாக சித்திரிக்கப்படுவார்கள். உழைக்கும் வர்க்கத்தினருக்காகவே அவர் தொடர்ந்து எழுதினார். யதார்த்த இலக்கியப்படைப்புகளை பிரதேச மொழிவழக்குடன் பதிவுசெய்த முக்கியமான படைப்பாளி அவர்.

ஈழத்து ஆக்க இலக்கியங்களில் பிரதேச மொழிவழக்குகள் தொடர்பாக ஆராயப்புகும் விமர்சகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மருதூர்க்கொத்தனை தவிர்த்து எழுதமுடியாது.

அவர் நடுநிலைமையுடன் உண்மைகளை உரைப்பவர். மனிதநேயமே அவரது குரலாகத் தென்பட்டது. மருதூர்க்கொத்தன் இன மத நல்லிணக்க இயல்பு கொண்டவர். இனப்பிரச்சினைக் காலங்களில் சமய நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தமிழ், முஸ்லிம் இன உறவை வலுப்படுத்தினார்.



1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலங்கையில் நாடளாவிய ரீதியில் நடத்திய பாரதி நூற்றாண்டு விழாவின் கிழக்கு மாகாணத்தின் அமைப்புக்குழுவில் இயங்கியவர்களில் மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, அன்புமணி ஆகியோர் மிகவும் முக்கியமானவர்கள். சுறுசுறுப்பாக செயற்பட்ட இவர்கள் மூவரும் கல்முனை பாத்திமா கல்லூரி, மட்டக்களப்பு மற்றும் அட்டாளைச்சேனை ஆசிரியப்பயிற்சிக் கல்லூரிகள், மட்டக்களப்பு நகரமண்டபம் ஆகியனவற்றில் பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதில் உழைத்தார்கள். இந்நிகழ்வுகளில் கவிஞர் சண்முகம் சிவலிங்கம், அச்சமயம் அரசியலுக்குள் பிரவேசிக்காத சட்டத்தரணி அஷ்ரப், நீதியரசர் பாலகிட்ணர், அரசாங்க அதிபர் அந்தோனிமுத்து ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.




மட்டக்களப்பு பொதுநூலகத்தில் இலக்கிய சந்திப்புக்கும் ஒழுங்கு செய்தார்கள். இச்சந்திப்பில் நான் சந்தித்தவர்தான் சிவராம். அவர் பின்னாளில் இயக்க அரசியலுக்குச் சென்று தராக்கியாக அறிமுகமாகி, அரசியல் ஆய்வு ஊடகவியலாளரானார்.

தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு.சி ரகுநாதன், மூத்த எழுத்தாளர் இளங்கீரன் ஆகியோருடன் கிழக்கிலங்கை பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளுக்காக உடன் பயணித்தேன். அந்தப் பயணத்தை மறக்கவே முடியாது. கடந்து சென்ற வசந்தகாலங்கள் அவை.

ரகுநாதன், இளங்கீரன், மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, அஷ்ரப், பாலகிட்ணர், தராக்கி சிவராம், சண்முகம் சிவலிங்கம், அன்புமணி அனைவரும் விடைபெற்றுச் சென்றுவிட்டனர். அந்த நிகழ்ச்சிகளுக்கு நேரடி சாட்சியாக என்னுடன் இருக்கும் மற்றுமொருவர் இங்கிலாந்திலிருக்கும் எழுத்தாளர், அரசியல் ஆய்வாளர் பஷீர்.

மருதூர்க்கொத்தனின் நாற்பது சிறுகதைகளைத் தேடி எடுத்து மீண்டும் ஒரு மருதூர்க்கொத்தன் கதைத்தொகுதியை அவரது பிள்ளைகள் 2007 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். அதனை அவுஸ்திரேலியா சிட்னியில் வதியும் கொத்தனின் புதல்வர் ஆரீஃப் எனக்குத் தந்தார்.

மருதூர்கொத்தனின் மாணவரான அட்டாளைச்சேனை தேசிய கல்விக்கல்லூரி விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா இந்நூலுக்கான முன்னுரையை வழங்கியிருக்கிறார்.

ஏப்ரில் மாதம் 19 ஆம் திகதி மருதூர்க்கொத்தனின் நினைவு தினம் ஆகும். அவரது நினைவுதினம் அன்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

சிட்னியிலிருக்கும் அமரரின் புதல்வர் ஆரீஃப் அவர்களும் எழுத்தாளர்தான். தமது தந்தையாரைப் பற்றிய ஒரு நினைவுப்பதிகையை எனக்கு அனுப்பியிருந்தார். அதனைப் படித்து நெகிழ்ந்துவிட்டேன். தந்தையாரின் படைப்புகளை தொடர்ந்தும் வெளியிடுவதில் ஆர்வம்கொண்டு அதற்காக உழைத்து வருகிறார்.

கண்டியில் இன்று 25 ஆம் திகதி மருதூர்க்கொத்தனின் கட்டுரைகள் இடம்பெற்ற 'நினைவுகளின் தேரோட்டம்' நூல் வெளியீட்டு அரங்கு நடைபெறவிருக்கிறது. இந்நூலை எழுத்தாளர்கள் செல்லத்துரை சுதர்சன், இக்பால் அலி ஆகியோர் தொகுத்துள்ளனர்.

**லெ. முருகபூபதி**
அவுஸ்திரேலியா

# விஜயகாந்துக்கு மத்திய அரசு பத்மபூஷண் வழங்காதது ஏன்?

நடிகரும் தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்த் கடந்த டிசம்பர் மாதத்தில் உடல்நிலை குறைபாட்டால் காலமான நிலையில், அந்த நேரத்தில் விஜயகாந்துக்கு பத்மபூஷண் விருது வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது. அதன்படி சில தினங்களுக்கு முன்னர் டெல்லியில் நடந்த விழாவில் விஜயகாந்துக்கு பத்மபூஷண் விருது வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ள நிலையில், அவருக்கு விருது வழங்கப்படவில்லை.



இது குறித்து மக்கள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் குவிந்து வருகின்றன.

டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் விருதுகள் வழங்கும் விழா பல கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நடைபெற்ற விழாவில் ஐந்து பேருக்கு பத்ம விபூஷண் விருதுகளும், 17 பேருக்கு பத்மபூஷண் விருதுகளும், 110 பேருக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டன. பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோர் கலந்து கொண்ட நிலையில் முன்னாள் குடியரசு துணை தலைவர் வெங்கையா நாயுடுவுக்கும் பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.

மேலும் பிரபல பாடகி உஷா உதூப் மற்றும் நடிகர் மிதுன் சக்கரவர்த்தி ஆகியோருக்கு பத்மபூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. விருதுகளை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார். ஆனால் கடந்த டிசம்பர் மாதத்தில் மறைந்த நடிகர் விஜயகாந்துக்கு பத்மபூஷண் விருது வழங்கப்படும் என்று அந்த நேரத்தில் மத்திய அரசு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு விருது வழங்கப்படவில்லை.

இது குறித்து நெட்டிசன்கள் கருத்து தெரிவிக்கையில், விஜயகாந்த் இறந்ததும் அவருக்கு இருந்த அனுதாப அலையை சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்காக மத்திய அரசு பத்மபூஷண் விருது அறிவித்துவிட்டு விஜயகாந்தின் மனைவி பிரேமலதா மத்திய அரசோடு கூட்டணி அமைக்காததால் இப்போது அவருக்கு விருது வழங்கப்படவில்லையா? என்று கேள்வி எழுப்பி வருகிறார்கள்.

# பிரதமர் மோடிக்கு எதிராக குவியும் கண்டனங்கள்!

அரசியல் கட்சித் தலைவர்கள் மதரீதியான துவேச கருத்துகளை தேர்தலுக்காக பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் முஸ்லிம்கள் குறித்த கருத்துக்கு அ.தி.மு.க பொதுச் செயலாளரும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுவரை எதிர் எதிர் துருவங்களாக இருந்த தி.மு.க_அ.தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் கூட பிரதமர் மோடிக்கு எதிராக கண்டன அறிக்கை விடுத்துள்ளன.



பிரதமர் நரேந்திர மோடியும் பல்வேறு மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் ராஜஸ்தானில் நடந்த பிரம்மாண்ட பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியது இந்தியாவில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதமர் மோடியின் இந்த பேச்சு சமூக வலைதளங்களில் பரவி நிலையில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பிரதமர் நரேந்திர மோடி மிகக் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின் உள்ளிட்ட பலரும் பிரதமரின் கருத்துக்கு கடுமையாக கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர்.

மேலும் மத ரீதியாக பேசி தேர்தல் விதிகளை மீறியதாக பிரதமர் மோடி மீது தேர்தல் ஆணையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் ஜனாதிபதி இப்றாஹிம் ரைசி இலங்கை விஜயம்













## ஈரான் ஜனாதிபதி கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலுக்கு விஜயம்





இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி நேற்று மாலை மஃரிப் தொழுகையை கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலில் நிறைவேற்றிய பின்னர் உரையாற்றினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

படம் ; அஷ்ரப் ஏ சமத்

வறுமை ஒழிப்பு பிரச்சினைக்கு தீர்வு

# ஒவ்வொரு குடும்பத்தின் வருவாய் அதிகரிப்பதிலேயே தங்கியுள்ளது

அமைச்சர் பந்துல குணவர்தன

நவீன விவசாயப் பொருட்கள் உள்ளிட்ட தொழில்கள் மூலம் ஒவ்வொரு குடும்பத்தின் வருமானத்தையும் அதிகரிப்பதிலேயே வறுமை ஒழிப்புப் பிரச்சினைக்கான தீர்வு இருக்கிறது. இந்த எல்லா சூழ்நிலைகளையும் புரிந்துகொண்டு, சிரமங்களை சமாளிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கமைய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஹோமாகம பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் அரிசி விநியோகிக்கப்பட்டது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவில் தகுதியான 15,640 பயனாளிக் குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், கட்டுவன மற்றும் ஹோமாகம நகரப்பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு தலா 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய அமைச்சர்,

“சுதந்திரத்திற்கு பிறகு இலங்கையின் பொருளாதாரம், கடனைச் செலுத்தாத காரணத்தால் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. நலன்புரி பொருளாதாரம் பேணப்பட்டாலும், பொருளாதாரத்தை நிலைநிறுத்த முடியாத நிலையை அடைந்து, வெடித்துச் சிதறியிருக்கிறது.

வரலாறு நெடுகிலும், பள்ளி மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டு வழங்க பெருந் தொகை பணம் ஒதுக்கப்படுகின்றது. சுகாதார சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது ஒரு அரசியல்வாதியின் தனிப்பட்ட பணமல்ல, மக்களிடம் வசூலிக்கப்படும் பணம்.



நடைமுறையில் அரிசி, காய்கறிகளை மட்டுமே உண்பதாக மக்கள் கூறுகின்றனர், ஆனால் உண்மையில் மக்கள் அரிசி மற்றும் காய்கறிகளை சேர்த்து வரியையும் சாப்பிட வேண்டியுள்ளது. அதற்கு காரணம் நாம் அன்றாடம் உட்கொள்ளும் ஒவ்வொரு பொருளிலும் வரி அடங்கியுள்ளதென்றும் தெரிவித்தார்.

## இலங்கையின் முன்னேற்றம் மற்றும்...

மேலும் வலுப்படுத்தும் ஒருங்கிணைப்பின் அடையாளமாக விளங்கும் இந்நிகழ்வில் பங்கேற்பதை பெருமையாகவும் கருதுவதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, "இந்த திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் என்றே கூறவேண்டும். இந்த அற்புதமான பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை உத்தியோகபூர்வமாக தொடங்கி வைக்கிறோம்.

ஆனால், இரு நாடுகளுக்கும் ஆசிய பிராந்திய நாடுகளுக்கும் இடையே அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை உறுதிசெய்வதே இங்கு மிக முக்கியமான விடயம் என்று நான் நம்புகிறேன்.

## ஈரானுடனான தொடர்புகளை பலப்படுத்தி...

தெரிவிக்க விரும்புகிறேன். இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்த சந்தர்ப்பத்தை நான் கருதுகிறேன்.

இந்தத் திட்டம் எனது பதவிக் காலத்திற்கு முன்பிருந்த தலைவர்களால் தொடங்கப்பட்டது என்பதைக் கூற வேண்டும். அத்துடன் உலர் வலய பிரதேசத்திற்கு நீர் வழங்கும் இத்திட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அக்கறை காட்டினார்.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இந்த திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

ஆனால் எமது இரு நாடுகளுக்கும் சவால்களை எதிர்கொள்வதில் நல்ல அனுபவம் உள்ளது.

எனவே, இந்த சவால்களையும் நாங்கள் வெற்றிகரமாக எதிர் கொண்டோம். மேலும் உமா ஓயா திட்டம் நமது இரு நாடுகளின் இரண்டு பழைமையான நீர்ப்பாசன மரபுகளின் கலவையாகும்.

ஈரானில் பெர்சியா மற்றும் இலங்கையில் அனுராதபுரத்தின் நீர்ப் பாசன பாரம்பரியம் இங்கே உள்ளது என்பதைக் கூற வேண்டும்.

## நாச்சியாதீவு வொரியர்ஸ் இறுதியாட்டத்திற்கு தெரிவு

அநுராதபுரம் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தால் 2023/2024 வருடத்திற்கான B பிரிவு உதைபந்தாட்ட லீக் போட்டியில் நாச்சியாதீவு வொரியர்ஸ் உதைபந்தாட்டக் கழகம் இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த லீக் போட்டியில் வொரியர்ஸ் அணி 5 போட்டிகளில் விளையாடி எவ்வித தோல்விகளையும் சந்திக்காது இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாச்சியாதீவு வரலாற்றில் ஒரு அணியானது அநுராதபுரம் உதைபந்தாட்ட சங்கத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது அணியாகவும் சங்கத்திற்கு தெரிவு செய்யப்பட்டு முதலாவது வருடத்திலே இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டதும் இதுவே முதல் முறையாகும். அண்மைக் காலமாக நாச்சியாதீவு வொரியர்ஸ் அணியானது பல்வேறு வெற்றிகளை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. வொரியர்ஸ் உதைப்பந்தாட்ட அணியின் வெற்றியின் பின்னணியில் பயிற்றுவிப்பாளர்களான சஹீல் அஹமட் மற்றும் மொஹமட் அப்ரித் செயற்படுவது குறிப்பிடத்தக்கது

## இலங்கை ஈரானுக்கு இடையே ஐந்து...

இலங்கைக்கும் ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கும் இடையில் புரிந்துணர்வு புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன்போது கைச்சாத்திடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாட்டின் கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்காக இலங்கையின் தேசிய கூட்டுறவு சபைக்கும் ஈரான் கூட்டுறவு சம்மேளனத்துக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அத்துடன் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தேசிய நூலகம் மற்றும் ஆவணக் காப்பகத்துக்கும் இலங்கை தேசிய நூலகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேம்படுத்தும் வகையில் மற்றுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இறுதியாக கலாசார, அறிவியல், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, வெகுஜன ஊடகம், இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்காக இலங்கை அரசாங்கத்துக்கும் ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## ஸ்ரீல.சு.க. தலைவராக செயற்பட...

உட்பட கட்சியின் 04 உறுப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டதை தொடர்ந்து இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இவ்வழக்கு விசாரணை நிறைவுக்கு வரும்வரை இடைக்காலத்தடை உத்தரவு அமுலிலிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டில் இவ்வழக்கை சரச்சந்திர தாக்கல் செய்தார். மேலும் 2019ஆம், 2021ஆம் ஆண்டுகளில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டமை சட்டவிரோதமானதென நீதிமன்றத்தில் அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி சாந்த ஜயவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீல.சு.க. யாப்பின்படி முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கட்சித் தலைவர் பதவியை வகிக்க சாத்தியமில்லையென்பதுடன், அவர்கள் ஆதரவாளர்களாக செயற்பட வேண்டுமெனவும், அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் வாதப் பிரதிவாதங்களை அவதானித்த நீதவான், இடைக்காலத்தடை உத்தரவை பிறப்பித்ததுடன், ஆட்சேபனைகளை ஜூன் 24ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு பிரதிவாதிக்கு உத்தரவிட்டார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பாக சட்டத்தரணிகளான ஜயமுதித ஜயசூரிய, சம்பத் பெரேரா ஆகியோர் ஆஜராகினர்.

## 'உமா ஓயா' திட்டம் மக்கள் பாவனைக்கு...

அமைச்சர்களான சஷீந்திர ராஜபக்ஷ, தாரக பாலசூரிய, விஜித பேருகொட, சிறிபால கம்லத், டி.வி. சானக்க, தேனுக விதான கமகே, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், தென்மாகாண ஆளுநர் விலி கமகே, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, ரவூப் ஹக்கீம், வடிவேல் சுரேஷ், சுதர்சன் தெனிபிட்டிய, திஸ்ஸ குட்டியாராச்சி, டி. வீரசிங்க, எம்.எல்.ஏ.எம். அதாவுல்லா, யதாமினி குணவர்தன மற்றும் அமைச்சர்கள், ஈரான் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஹுசைன் அமீர்அப்துல்லாஹியன், அந்நாட்டு அமைச்சர்கள் உள்ளிட்ட தூதுக் குழுவினர், இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் மற்றும் அதிதிகள் பலர் கலந்துகொண்டனர்.


### பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலையின் அடிப்படை தகைமைக்குப் பின்னரான தாதியர் பாடசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைக்கான சேவையை வழங்குதல்**
**2024/2025**

இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் அடிப்படை தகைமைக்குப் பின்னரான ஆரம்ப தாதியர் பாடசாலையில் அமைந்துள்ள சிறிய சிற்றுண்டிச்சாலைக்கான சேவையை வழங்குவதற்காக 2024-05-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. சேவை ஒப்பந்தக்காலம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நாள் முதல் ஒரு வருடமாகும்.

03. பிரதான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு திருப்திகரமான சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்கிய அனுபவம் மற்றும் சொத்துக்கள் உள்ள இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2024-04-26ஆம் திகதி முதல் 2024-05-14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. சிற்றுண்டிச்சாலைக்காக பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை 2024-05-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து பிரதான கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். (விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘தாதியர் பாடசாலை சிறிய சிற்றுண்டிச்சாலை’’ எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)

தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடுத்து சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு 10.**

### பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலையின் தாதியர் பாடசாலையில் அமைந்துள்ள சிறிய சிற்றுண்டிச்சாலைக்கான சேவையை வழங்குதல் -**
**2024/2025**

இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் தாதியர் பாடசாலையில் அமைந்துள்ள சிறிய சிற்றுண்டிச்சாலைக்கான சேவையை வழங்குவதற்காக 2024-05-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. சேவை ஒப்பந்தக்காலம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நாள் முதல் ஒரு வருடமாகும்.

03. பிரதான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு திருப்திகரமான சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்கிய அனுபவம் மற்றும் சொத்துக்கள் உள்ள இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2024-04-26ஆம் திகதி முதல் 2024-05-14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. சிற்றுண்டிச்சாலைக்காக பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை 2024-05-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து பிரதான கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். (விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘தாதியர் பாடசாலை சிறிய சிற்றுண்டிச்சாலை’’ எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)

தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடுத்து சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு 10.**


## இன்றைய பலன்கள்

(25.04.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
ஒரு சிலருக்கு இடமாற்றம் ,வீடு மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இலாகா மாற்றம் அல்லது புதிய வேலைகளுக்கான முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம் :**
உங்களின் பணத்தொகை உடனுக்குடன் பூர்த்தியாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட சரிவை ஈடு கட்டுவீர்கள்.

**மிதுனம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. தொழிலில் இருந்த குறுக்கீடுகள் தானாகவே விலகும். கொடுக்கல் வாங்கல்களில் சுமூகமான நிலை உருவாகும்.

**கடகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். தந்தை வழி உறவால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தை பொருத்தவரை நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**சிம்மம்:**
நிறைந்த தன லாபம் உண்டு. என்றாலும் மனதில் ஒரு வித பய உணர்வு ஏற்படும். பொருளாதாரத்தில் பற்றாக் குறை ஏற்படாது.

**கன்னி:**
திருமண வயதை அடைந்த ஆண் பெண்களுக்கு திருமண பேச்சு வார்த்தை நடைபெறும். ஆனால் அவ்வளவு சுலபத்தில் திருமணம் முடிவாகாது .

**துலாம்:**
தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு இயங்குவீர்கள். கடன் சுமை குறையும் .

**விருச்சிகம்:**
புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொழில் வெற்றி நடை போடும். இந்த நேரத்தில் இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும்.

**தனுசு:**
ஆரோக்கிய தொல்லைகள் அதிகரிக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். பழைய தொழிலை விட்டு புதிய தொழிலில் கவனம் செலுத்துவீர்கள்.

**மகரம்:**
தன வரவு தாராளமாக வந்து சேரும். தடைகள் அகலும். வீரத்தோடும் விவேகத்தோடும் செயல்படுவீர்கள்.

**கும்பம்:**
தன வரவு திருப்தி தரும். பொருளாதார பெற்ற குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்:**
ஏற்றமும் இரக்கமும் கலந்த நிலை ஏற்பட்டாலும் எப்படியாவது காரியங்கள் கடைசி நேரத்தில் கை கூடிவிடும்.

## ஆசிரியர்களின் சம்பள முரண்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

சபையில் தெளிவுபடுத்திய அமைச்சர், மேற்படி பதவியில் உள்ளவருக்கு இவ்வாறான அறிக்கையை வெளியிடுவதற்கான எத்தகைய அதிகாரமும் கிடையாது. அது தொடர்பில் விளக்கம் ஒன்றைப் பெற்றுத்தருமாறு நான் அந்த சிரேஷ்ட உதவி செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

நான் இதற்கு முன்னரும் இந்த அதிபர்களுக்கான சம்பள முரண்பாடு தொடர்பில் பல தடவைகள் சபையில் விளக்கமளித்துள்ளேன். இந்த விவகாரம் தொடர்பில் 2021 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். அதன்போது அப்போதைய கல்வியமைச்சர் டளஸ் அழகப்பெருமவின் தலைமையில் அது தொடர்பில் ஆராய்ந்து அப்போதைக்கு தற்காலிக தீர்வு வழங்கப்பட்டது. எனினும் அதன் மூலம் சம்பள முரண்பாடு தீர்க்கப்படவில்லை.

அந்த வகையில் கொள்கை ரீதியில் இந்த விவகாரம் தொடர்பில் கண்காணிப்பதற்கு மேற்படி அதிகாரிக்கு அதிகாரம் கிடையாது. அதனடிப்படையில் நான் அதற்கான காரணத்தை விளக்குமாறு அவருக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றும் அவர் சபையில் மேலும் தெரிவித்தார்.

## சம்பள நிர்ணய சபை உடனான...

தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நேற்று சம்பள நிர்ணய சபை கூடிய போது, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்களும் அதில் கலந்து கொண்டனர். ஆனால் நேற்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர். அவர்கள் மீண்டும் ஒருமுறை தோட்டத் தொழிலாளர்களையும் சம்பள நிர்ணய சபையையும் புறக்கணித்துள்ளமையையே காண்பித்துள்ளது. அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து தோட்ட நிர்வாகத்தை புறக்கணிக்க வேண்டும். ஏற்கனவே இரண்டு முறை கூடிய சம்பள நிர்ணய சபைக்கு முதலாளிமார் சம்மேளனம் வருகை தரவில்லை. மூன்றாம் முறையும் வருகை தராவிடின் நாட்டின் தொழில் சட்டத்துக்கமைய சம்பள நிர்ணய சபையில் ஆகக் கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் எந்தத் தொகை நிர்ணயிக்கப்படுகின்றதோ அதனை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வேதனமாக உறுதி செய்து வர்த்தமானியில் வெளியிட தொழில் அமைச்சருக்கும் தொழில் ஆணையாளருக்கும் அதிகாரம் உள்ளது. பெருந்தோட்ட நிர்வாகங்களிடம் நாம் கையேந்தவில்லை உழைப்புக்கேற்ற ஊதியமே கேட்கின்றோம் என்று இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தினுடைய அடுத்த கட்ட நடவடிக்கை கலந்துரையாடலின் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

## தமிழரசு கட்சி தொடர்பான வழக்கு...

வழக்கு விசாரணையின் பின்னர் இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், "இவ்வழக்குக்கு 07 பிரதிவாதிகள் பெயரிடப்பட்டுள்ளதுடன், 02ஆம், 04ஆம் பிரதிவாதிகளான தலைவராக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன், செயலாளராக தெரிவான ச.குகதாசன் ஆகியோர் சார்பாக ஆஜராகியிருந்தேன். சுமார் மூன்று மணி நேரம் இவ்வழக்கு விவாதிக்கப்பட்டு சமர்ப்பணம் செய்யப்பட்டது. கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு பொதுநலன் கருதி முடிவுக்கு கொண்டு வரவேண்டும். கட்சி யாப்பை மீறியதாக இங்கு எதுவும் சொல்லப்படவில்லை. குறிப்பாக, சில விதிகளில் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வழக்கு தொடர்ந்தால் அதனை வெற்றி கொள்ளலாம். ஆனால், காலம் செல்லும். இதனால் வழக்கை காலம் சென்ற நிலையில் வெற்றி கொண்டால் தோல்வியாகவே கருதப்படும். வாதி தரப்பில் கோரும் நிவாரணத்தை வழங்க தயாராக இருக்கிறோம். எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இதனை வாதி தனது சட்டத்தரணி ஊடாக தெரிவிக்க வேண்டும். வழக்கை வாபஸ் பெற வேண்டும் என எனது வாதத்தை நீதிமன்றத்தில் முன்வைத்தேன்" என்றார்.

## ஜனாதிபதித் தேர்தலில்...

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லையென கூறுபவர்களுக்கு வேறு ஏதும் திட்டம் இருக்கலாமென்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## அநுராதபுரம்வரை ரயில் சேவை...

போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இதன்போது தலாவ, தபுத்தேகம ரயில் நிலையத்தை அண்டிய பகுதிகளிலும் கல்கமுவ ரயில் பாதைக்கு கீழ் புதிய யானைக் கடவை அமைக்கும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதால் பொசன் பௌர்ணமிக்கு முன்னதாக ரயில் சேவையை ஆரம்பிக்க முடியாதெனவும் ஹேமரத்தன தேரரிடம் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

## தோட்ட தொழிலாளர்களின் சம்பள...

சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் மற்றும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் கலந்துரையாடி குறைந்தபட்ச சம்பளமாக 1,700 ரூபாவை வழங்க ஜனாதிபதி உத்தேசித்துள்ள போதிலும், தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்

# பிரதான சூத்திரதாரிகளை தேடும் விசாரணையை அரசு நிறுத்தவில்லை

## சபையில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை தேடும் விசாரணைகளை அரசாங்கம் நிறுத்தவில்லை என நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பான குற்றவாளிகளை இனங்காண்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என தெரிவித்த அவர், குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு கவலை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மை தகவல்களை அறிந்துகொள்வதற்கு நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல்வேறு தகவல்கள் கிடைத்த நிலையில் அது தொடர்பில் விடயங்களை நான் அப்போது வெளியிட்டேன். எனினும் நாட்டில் இரத்த ஆறு ஓடும் நெருக்கடியை தோற்றுவிக்க விஜேயதாச முற்படுகிறார் என எனக்கு எதிராக பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. அக்காலங்களில் நான் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்தேன். எனது மனசாட்சிக்கு அதன் உண்மை நிலை தெரியும்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் ஏழு நாட்களுக்குப் பின்னரே பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் தொடர்கின்றன.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்ட மாஅதிபருக்கும், பொலிஸ் மாஅதிபருக்கும் நான் எழுத்து மூலமாக அறிவித்தேன்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. சட்ட மாஅதிபர் திணைக்களம் 43 குற்றப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளன. இதில் 93 குற்றவாளிகள் உள்ளனர். தற்போதைய சட்ட மாஅதிபரே 43 குற்றப்பத்திரங்களையும் தாக்கல் செய்தார்.

முன்னாள் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா, மேல் நீதிமன்றத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்தார்.

மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவில் இந்த குற்றப்பத்திரம் விசாரணை செய்யப்பட்டு போதுமான சாட்சியம் இல்லாததால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

தற்போதைய சட்டமா அதிபர் தாக்கல் செய்த 43 குற்றப்பத்திரத்தில் பிரதான வழக்கில் 25 குற்றவாளிகள் உள்ளார்கள். நீதியரசர் தமித் தொடவத்த தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர் குழுவில் அந்த விசாரணைகள் நடைபெறுகின்றன. 98 பேரிடமிருந்து சாட்சிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் நீதித்துறையின் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படுகின்றன.

சட்ட மா அதிபருக்கு தேவையான வகையில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. பொலிஸார் முன்வைக்கும் விசாரணை அறிக்கைக்கு அமையவே சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்ய முடியும்.

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா சேவையில் இருந்து ஓய்வுப் பெறுவதற்கு முன்னைய தினத்தில் குண்டுத்தாக்குதல் பின்னணியில் பாரிய சூழ்ச்சிகள் உள்ளதாகவும் பிரதான சூத்திரதாரி உள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

இவரது கருத்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. குண்டுத் தாக்குதல் தொடர்பில் தெரிந்த விடயங்களை பொலிஸாருக்கு குறிப்பிடுமாறு அவருக்கு அழைப்பு விடுத்த போது அதற்கு எதிராக அவர் நீதிமன்றத்தை நாடி ரிட் மனு தாக்கல் செய்து தன்னை பாதுகாத்துக் கொண்டார்.

பிரதி பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன பற்றி பேசப்படுகிறது. நீதியரசர் ஜனக டி சில்வா தலைமையிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின் குழுவின் அறிக்கையில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 12 அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையின் அறிக்கையை பொலிஸ் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் பின்னர் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் நீதியரசர் ஜனக டி சில்வா தலைமையிலான ஆணைக் குழு, தற்போதைய பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைத்துள்ளது. இவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையில் முதல் விசாரணைகளில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆனால் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. அவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 07 அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது. தகவல் தெரிந்தவர்கள் அவற்றை பாதுகாப்பு தரப்புக்கு தெரிவிக்கலாம். பாராளுமன்றத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில்

## 13 வருடங்களில் 99,375 விபத்துகள்; 66 பேர் பலி, 637 பேர் நிரந்தர ஊனம்

சாரதிகளின் கவனயீனத்தால் 5,292 விபத்துகள்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டதிலிருந்து இதுவரை விபத்துகளால் 66 பேர் உயிரிழந்ததுடன், 637 பேர் நிரந்தர உடல்நல பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக, நெடுஞ்சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக்குழு தெரிவித்தது.

இந்த நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டு 13 வருடங்களாகுவதுடன், நெடுஞ்சாலையில் இதுவரை 99,375 விபத்துகள் பதிவாகின. 5,292 விபத்துகள் வாகனச் சாரதிகளின் கவனயீனத்தால் ஏற்பட்டன.

ஆகையால் அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களைச் செலுத்தும் போது அவதானமாக செயற்படுமாறு சாரதிகளிடம் நெடுஞ்சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக்குழு கேட்டுக் கொண்டது.

உலகில் 100 செல்வாக்கு மிக்க நபர்கள்

## இலங்கை பெண் ஒருவரை த டைம்ஸ் சஞ்சிகை தெரிவு

உலகில் 100 செல்வாக்கு மிக்க நபர்களில் ரொசன்னா ஃபிளமர் கால்டெரா என்ற இலங்கை பெண் ஒருவரும் இடம்பிடித்துள்ளார். உலகப் புகழ் பெற்ற த டைம்ஸ் சஞ்சிகையில் இந்த வருடத்துக்கான சமூகத்தில் செல்வாக்கு மிக்க நபர்களில் ஒருவராக இவர் தெரிவாகியுள்ளார்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேல் இலங்கையில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்காக குரல் கொடுத்து வரும் பெண்ணாக இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது குரல் உலகளவில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு வெற்றியை ஈட்டியுள்ளதாகவும் த டைம்ஸ் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அமரவீர, லசந்த, துமிந்த மூவரையும்

# ஸ்ரீல.சு.க.விலிருந்து நீக்குவதை தடுக்கும் தடை உத்தரவு நீடிப்பு







ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவிகளிலிருந்து அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை நீக்குவதை தடுக்கும் வகையில் விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பதவிகளிலிருந்து இவர்கள் மூவரையும் நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடை உத்தரவை எதிர்வரும் மே மாதம் 08ஆம் திகதிவரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (24) உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீல.சு. கட்சியிலிருந்து தாம் நீக்கப்பட்டமைக்கு எதிராக மேற்படி மூவரால் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தியத்தலாவை கார் விபத்து சம்பவம்

# சாரதிகளுக்கல்ல, ஏற்பாட்டாளருக்கே தண்டனை வழங்கப்பட வேண்டும்

## சபையில் நளின் பண்டார எம்.பி.

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தியத்தலாவையில் ஏழு பேரின் உயிர்களை காவு கொண்ட கார் ஓட்டப் பந்தய விபத்து தொடர்பில் பந்தயக் கார் சாரதிகளன்றி போட்டி ஏற்பாட்டாளர்களுக்கே தண்டனை வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

போட்டி ஏற்பாட்டாளர்களின் கவனயீனம் மற்றும் ஏற்பாட்டு நடவடிக்கைகளே மேற்படி விபத்துக்கு முக்கிய காரணம் என்றும் அதனால் அவர்களே குற்றவாளியாக கணிக்கப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் தண்டனைக்குரிய குற்றவாளிகள் பெயரிடப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தியத்தலாவை கார் பந்தயத்தின் போது ஏற்பட்ட விபத்தில் 07 பேர் மரணித்து 20க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து போட்டி ஏற்பாட்டாளர்களின் கவனயீனம் காரணமாகவே ஏற்பட்டுள்ளது.



இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் ராம் மகேஷையாழ். இந்திய துணைத் தூதரகத்தில் டென்மார்க்கிலிருந்து வருகை தந்துள்ள இலங்கையைச் சேர்ந்த தருமன் தர்மகுலசிங்கம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பாக அவர்கள் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.


## இலங்கை வங்கி

### நயினாதீவுக் கிளையை இடமாற்றம் செய்ய பொருத்தமான கட்டிடம் தேவை

**உத்தேசக் கட்டிடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

01. கட்டிடம் நகரின் மத்தியில் அமைந்ததாகவும் சட்டரீதியாக நிர்மாணிக்கப்பட்டதாகவும் 10 வருடத்திற்கு மேற்படாத காலத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
02. குறைந்தபட்சம் தரைப்பிரதேசம் 1200 சதுரஅடியாக இருத்தல் வேண்டும்.
03. தரைப்பிரதேசம் வெளிர் தரை ஓடுகளுடன் 2x2 அளவு கொண்ட மாபிள் பதிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். (Light Color tile preferably white)
04. கட்டிடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 30 அடிக்கு மேற்பட்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும். கட்டிடத்தின் பின்பக்கம் மின்பிறப்பாக்கியை பேணக்கூடியவாறான தனியான அறை காணப்பட வேண்டும்.
05. போதுமான வாகன நிறுத்துமிடம் இருத்தல் வேண்டும். (குறைந்தபட்சம் 6 வாகனத்திற்கான நிறுத்துமிடங்கள் விரும்பத்தக்கது).
06. கட்டிடம் வெளிர் நிறத்துடன் கூடியசீலிங் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும். (Light color ceiling preferably white)
07. ஸ்ரீ லங்கா ரெலிகொம் இல் இருந்து தொலைபேசி இணைப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி இருத்தல் வேண்டும்.
08. மூன்று கட்டமின்சார இணைப்பு 30AMP கொண்டதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அலுவலக தேவைப்பாடுகளுக்கு பொருந்துமாறு மின்சார அமைப்புகள் இருக்கவேண்டும்.
09. நீர் வழங்கல் அமைப்பு இருத்தல் வேண்டும். அத்துடன் குறைந்தபட்சம் 1,000 லீட்டர் கொள்ளளவுடைய ஓர் நீர்த்தாங்கி உயரமான மேற்பரப்பில் ஓர் பொருத்தமான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. வெவ்வேறாக பாவிக்கக் கூடியவாறான மூன்று மலசலகூடங்கள் கட்டிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். ஆண் பெண் மலசலகூடங்கள் கட்டிடத்தின் உட்புறமும் கட்டிடத்தின் பின்புறமாக பிறிதொரு மலசலகூடம் காணப்பட வேண்டும்.
11. பின்புற கதவு மற்றும் யன்னல்கள் கிறில்களுடன் பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவை இல்லாத பட்சத்தில் அதனை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டும். (கனரக இரும்பு கிறில்).
12. கட்டிடத்தின் முன் பக்கம் உறுதியான கண்ணாடியைக் கொண்டிருத்தல் வேண்டும் (tempered Glass)
13. கட்டிடமானது தீ அபாயக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள தரப்பினர் கட்டட வரைபடம், நில அளவையாளர் வரைபடம், உறுதிச்சான்றிதழ் அமைவிடச் சான்றிதழ் (COC) என்பவற்றின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை தொடர்பான விண்ணப்பக் கடிதம் என்பவற்றுடன் கீழ்க்காணும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)**
**இலங்கை வங்கி**
**வடமாகாண காரியாலயம்**
**ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## முன்மொழிவுகளுக்கான அழைத்தல்

### பிரதேச சபை வென்னப்புவ தங்கொட்டுவவிலுள்ள தங்கொட்டுவ நகர மண்டபத்தின் மீதி வேலை

1. தங்கொட்டுவவில் அமைந்துள்ள வென்னப்புவ பிரதேச சபையின் தங்கொட்டுவ நகர மண்டப மீதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ஆலோசனை மற்றும் நிர்மாண மேற்பார்வை சேவைகளுக்காக தகுதியுள்ள உசாத்துணையாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை வென்னப்புவ பிரதேச சபை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. ஆங்கில மொழியிலுள்ள முன்மொழிவு ஆவணங்கள் ரொக்கப் பணத்தில் 3000 ரூபாவை செலுத்திய பின்னர், வென்னப்புவ பிரதேச சபையின் தொழில்நுட்ப பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள முன்மொழிவு ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். முன்மொழிவு ஆவணங்கள் 2024.04.29 ஆம் திகதியிலிருந்து 2024.05.27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் வழங்கப்படும்.
3. முன்மொழிவு ஆவணங்கள் வென்னப்புவ பிரதேச சபையின் தொழில்நுட்ப பிரிவில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
4. தகுதியுள்ள உசாத்துணையாளர்கள் பின்வரும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
   - o நிகரான வேலைத் தன்மையில் அனுபவம் (கடந்த 5 வருடங்களில் 3 பணிஒதுக்கீடுகள்)
   - o தொழில்சார் பதவி அலுவலர்களை நியமிப்பதில் அனுபவம்.
   - o (Chartered Qualified M & E Engineer – minimum 5 years experience)
   - o (Chartered Qualified Structural Engineer – minimum 5 years experience)
   - o (Chartered Qualified Architecture – minimum 5 years experience)
   - o தகைமை பெற்ற உசாத்துணையாளர்கள் செயற்பணிகளை நிறைவேற்றல் வேண்டும்.
5. வென்னப்புவ பிரதேச சபை கூட்ட அறையில் 2024 மே 17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்-முன்மொழிவுக் கூட்டம் நடைபெறும்.
6. முன்மொழிவுகள் 2024.08.27 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. முன்மொழிவுகளுக்கான ஆவணமானது 2 உறைகள் முறையை பாவித்து அழைக்கப்படுகின்றன. 1 ஆவது உறையானது தொழில்நுட்ப முன்மொழிவையும் 2 ஆம் உறையானது விலை முன்மொழிவையும் அடக்கியிருத்தல் வேண்டும். தொழில்நுட்ப முன்மொழிவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'தொழில்நுட்ப முன்மொழிவு' எனவும் விலை முன்மொழிவை அடக்கியுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் 'விலை முன்மொழிவு' எனவும் குறிப்பிடவும். இவ்விரண்டு உறைகளும் தனியொரு உறையில் அடக்கப்பட்டு "Request for Proposal for Consultant Service" என அதனது இடது பக்க மேல் மூலையில் தலையங்கமிடப்பட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
8. முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் செயலாளர், பிரதேச சபை, வென்னப்புவ என்ற முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியானது 2024.05.28 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணியாகுமென்பதுடன் அவைகள் மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
10. முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் உசாத்துணையாளர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**செயலாளர்,**
**வென்னப்புவ பிரதேச சபை,**
**கொழும்பு-சிலாப வீதி, வென்னப்புவ.**
**தொலைபேசி: 031-2255276**



## கேள்வி நீடித்தல் அறிவித்தல்

### விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் உத்தேசிக்கப்பட்டுள்ள ஹொக்கி புல்தரை

நிர்மாணித்தலுக்கான அமைவிடம் - கொழும்பு மற்றும் மாத்தளை

ஒப்பந்த இல.: DSD/PRO/3/3/8-2024

2024.04.10 ஆம் திகதியன்று டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்டுள்ள கேள்வியானது பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென இலங்கை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி : 2024.05.02

கேள்வி மூடும் திகதி : 2024.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 09,**
**பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு - 07.**



ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board

செவ்வாய் 2024.04.23 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5454 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,527,032.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 0 9 4 1 6 5

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 029 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 4 1 6 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3696 — சீட்டிழுப்பு திகதி 2024.04.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,438,966.16
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 06 21 44 50 — விசேட எழுத்து F — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 86678

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1802 — 2024.04.23 — 05744 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 430,755,958.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 22 — வெற்றி இலக்கங்கள் 12 45 58 79
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.04.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0280 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 8 9 9 0 3 9 — L7 எழுத்து K
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 28,713,654.48

ராசி சுப பலன் — திகதி 2024.04.23 — சீட்டிழுப்பு இலக்கம் 763 — செவ்வாய் — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,066,537.20
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 32 35 41 47 — தனயோக இலக்கம் 18225 — நாளுக்கான விதி எண் 13

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1484 — 2024.04.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,445,418.72
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 20 22 43 58 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 57080

# கிழக்கின் குரல்



## ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அதிகாரி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம்





(மட்டக்களப்பு குறூப்நிருபர்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி அவுஸ்சா குபோட்டா நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனுக்கும் ஐ.நா உயர்அதிகாரிக்கும் இடையில் கலந்துரையாடலொன்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்களான ஐந்தாண்டு திட்டம் மற்றும் வீடமைப்பு திட்டங்கள் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டன.

மேலும் மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான விடயங்கள் தொடர்பாக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதிஸ்குமார் விளக்கமளித்தார்.

மேலும் காலநிலை மாற்றத்தால் மாவட்டத்தில் ஏற்படும் வெள்ள பாதிப்பு, பாடசாலை மாணவர் இடைவிலகல்கள், சிறு குளங்களை புனரமைத்தல், விவசாயிகளுக்கான நெல் உலர்த்தும் இயந்திரத்தின் தேவை மற்றும் பல முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் திட்ட நிபுணர் கே.பார்த்திபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களான வீ.நவநீதன், ரி.நிர்மலராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீல.மு.காங்கிரஸூடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது

### ரிஷாட் பதியுதீன் எம்.பி தெரிவிப்பு



(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

முஸ்லிம் சமூகத்தின் நலன்கருதி எதிர்காலத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸூடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பொத்துவிலில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த பொதுத்தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை சார்ந்த தராசு சின்னத்தில் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை முன்னிறுத்தி இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை வென்றெடுத்தோம். அந்த நேரத்தில் எமது கட்சியை சேர்ந்தவர்களுக்கு நாங்கள் தான் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒப்பந்தம் செய்திருந்தோம்.

அந்த நேரத்தில் பொதுத்தேர்தலில் தராசு சின்ன கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த அலி சப்ரி றஹீம், தங்கம் கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த போது அதுதொடர்பில் விசாரித்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் அவரை கட்சியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தெரிவித்தோம். எனினும் அதற்கு எந்தவித முடிவும் தரவில்லை.

அதன்பிறகு அலி சப்ரி றஹீம் மாவட்ட நீதிமன்றத்திற்கு போய் தனக்கு எதிராக இவர்கள் செயற்படக்கூடாது என்ற நீதிமன்ற உத்தரவை பெற்று அவர் தற்போதும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார். ஆகவே, முஸ்லிம் சமூகம் சார்பாக இருக்கும் இந்த இரண்டு கட்சிகளும் ஒற்றுமையாக முஸ்லிம் சமூகம் சார்பாக செயற்பட வேண்டும்

அத்தோடு, ஜனாதிபதி தேர்தல் நடக்குமாகவிருந்தால் நாட்டின் பொருளாதார நிலை, மக்களின் எதிர்கால நிலைமை, நாட்டின் எதிர்கால ஸ்திரதன்மை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு ஜனாதிபதி வேட்பாளரோடு பேசி எந்த கட்சிக்கு ஆதரவளிப்பது என்ற முடிவு எடுக்கப்படுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

## மடத்தடி மீனாட்சியம்மன் தீர்த்தோற்சவம்



வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழாவின் இறுதி நாள் தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் பௌர்ணமி தினத்தன்றுஅ வங்கக் கடலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஆலய பரிபாலன சபை தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் தலைமையிலான நிருவாக சபையினர் சுன்னம் இடிக்கும் கிரியைகளில் பங்கேற்ற பின்னர் அம்பாள் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா நடைபெற்றது. (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

## மட்டக்களப்பில் சித்திரைப் புத்தாண்டு விழா





(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரை புத்தாண்டு விழா மிகச் சிறப்பாக கல்வி அலுவலக வளவில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளரும் மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளருமான திருமதி சுஜாதா குலேந்திர குமார் தலைமையில் நடைபெற்ற சித்திரை புத்தாண்டு விழா நிகழ்வில் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுகள் நடத்தப்பட்டன.

நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை மாகாண பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திர குமார் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். ரவி ராஜ் உட்பட கல்வித் திணைக்கள அதிகாரிகளும் பாடசாலை வலய கல்வி அலுவலர் பிரிவில் செயற்படும் பாடசாலை அதிபர்களும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## கிழக்கில் முந்திரி செய்கை வீழ்ச்சி

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இம்முறை முந்திரி செய்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக செய்கையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் பருவகால பழமான முந்திரி பழம் அதிகளவு அறுவடை செய்யப்படுவது வழமையாகும். அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்தைகள், வீதியோரங்களில் முந்திரி பழம் அமோகமாக விற்பனை செய்யப்படும்.

இதனை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் விரும்பி கொள்வனவு செய்வார்கள். இம் முறை முந்திரி பழங்களை காண்பது அரிதாகவுள்ளது. இதனால் பருவகால பழங்கள் விற்பனை செய்யும் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## குச்சவெளியில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச அரிசி வழங்கிவைப்பு

(கந்தளாய் தினகரன் நிருபர்)



பிரதேச மக்களுக்கான இலவச அரிசி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் குணநாதன் தலைமையில் புல்மோட்டை மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அம்பாறை, மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா, கட்சி தேசிய அமைப்பாளர் வை.எஸ்.எம்.ஸியா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். இதனைத்தொடர்ந்து புல்மோட்டை மத்திய கல்லூரி மற்றும் சாலாமியா முஸ்லிம் வித்தியாலயம் போன்றவற்றிற்கான முக்கிய கட்டுமானப்பணிகள் தொடர்பில் சாதகமான முடிவுகள் எட்டப்பட்டன.

## விவசாயிகளுக்கு பண்ணை வியாபாரப் பயிற்சி

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பண்ணை வியாபாரப் பாடசாலை என்னும் கருப்பொருளின் கீழ் பயிற்சிநெறியொன்று குருக்கள்மடம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கமத்தொழில் அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மாதுளை பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் தொழில், பண்ணையின் தற்போதைய நிலைமைகளை ஆராய்தலும், சந்தைவாய்ப்புக்களை இனம்காணலும், விற்பனையும் சந்தைப்படுத்தலும், சந்தை மதிப்பீட்டிற்கு ஆயத்தமாகுதல், பண்ணைப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல், வியாபாரத்திட்டமிடல், போன்ற பல விடயங்கள் இதன்போது விவசாயிகளுக்கு தெளிவூட்டப்பட்டன.

பயிற்சிநெறி 12 நாட்கள் நடைபெறவுள்ளதுடன், இறுதியில் விவசாயிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இதில் சிரேஷ்ட விவசாயப் போதனாசிரியரும், பயிற்றுவிப்பாளருமான சிறிபவன் வளவாளராகக் கலந்து கொண்டு விவசாயிகளுக்குரிய பயிற்சிகளை வழங்கி வைத்தார்.



## சுவாமி விபுலானந்தர் ஆண்டு பிரகடனம்; காரைதீவில் கோலாகலமாக அங்குரார்ப்பணம்





(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் சுவாமி விபுலானந்தர் ஆண்டு நேற்றுமுன்தினம் (23) செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமியில் பிரகடனம் செய்யப்பட்டது.

விபுலானந்த அடிகளார் துறவறம் பூண்டு 100 ஆண்டுகளாகின்றன.

நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்ற நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண வைபவம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் வரவேற்புரையாற்றினார். அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு நடைபெற்றது. மேலும், சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனப்பணிப்பாளர் கலாநிதி திருமதி ப்ளோரன்ஸ் பாரதி கென்னடி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## ஆரையம்பதி கடற்கரையில் பட்டத் திருவிழா





மட்டக்களப்பு ஆரையம்பதி கடற்கரையில் பட்டத் திருவிழா அண்மையில் நடைபெற்றது. ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தினால் முதல் தடவையாக பட்டத் திருவிழா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பட்டத் திருவிழாவில் 30ற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றினர். இதில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கும் ஆரையம்பதியைச் சேர்ந்த ரவீந்திரன் சோபிதன் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். சர்வ மதங்களின் ஊடாக இன நல்லிணக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் முதலிடம் பெற்ற மாணவர் பறக்க விட்ட பெட்டி பட்டம் அமையப்பெற்றிருந்தது. (படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

## காஸாவில் பாதிப்புற்ற சிறார்களுக்கு கிண்ணியாவில் நிதி சேகரிப்பு

(கிண்ணியா மத்திய நிருபர்)

காஸா சிறார்களுக்கான நிதி சேகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கமைய கிண்ணியா மஜ்லிஸ் சூரா முன்னெடுத்த வேலைத்திட்டம் வெற்றிகரமானதாக நிறைவடைந்துள்ளது. 'கிண்ணியாவிலிருந்து காஸா குழந்தைகளுக்கு' என்னும் தொனிப்பொருளில் நிதிசேகரிப்பு நிகழ்ச்சிதிட்டம் கடந்த 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

கிண்ணியா ஜம்மியத்துல் உலமா சபை, பள்ளிவாசல்கள் சம்மேளனம், இளைஞர் அமைப்புகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் தனிப்பட்ட குடும்ப அங்கத்தவர் என்று பல அமைப்புக்கள் இத் திட்டம் வெற்றியடைவதற்கு தங்களுடைய முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தனர். அதற்கமைய ரூ. 53 இலட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை RDHS அலுவலகத்தில் தித்திக்கும் திருவிழா

(பாலமுனை விசேட நிருபர்)





ஈஸ்டர், நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு ஆகிய பண்டிகைகளை சிறப்பிக்கும் வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தித்திக்கும் திருவிழாக்கள்" நிகழ்வு திங்கட்கிழமை (22) பணிமனையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ் சிறுகதை பெண் எழுத்தாளர்....

# கலாபூசணம் இஸ்மாலிஹாவுக்கு பெண் ஆளுமை விருது கௌரவம்



கலாபூசணம் புசல்லாவை கவிதாயினி இஸ்மா லிஹா சர்வதேச பெண் ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 'விழித்தெழு பெண்ணே' எனும் மகுடத்தின் கீழ் கனடா சர்வதேச பெண்கள் அமைப்பு இந்நிகழ்வை நடத்தியது.

கண்டி கோல்டன் கிரவுன்ட் நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் தமிழ் பெண் ஆளுமை விருது வழங்கி வைக்கும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது. அந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பெண் ஆளுமைகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அந்நிகழ்வில் மலையகத்தில் ஒரு முன்னணிமிக்க பெண் எழுத்தாளர் புசல்லாவை கலாபூசணம் கவிதாயினி இஸ்மாலிஹா விழித்தெழு பெண் ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதிய 'தூரத் தெரியும் துடுவானம்' எனும் கவிதைத் தொகுதி நூல் வெகு விரைவில் வெளிவர இருக்கிறது. இவர் சிறுகதை , கவிதை, போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டு சுமார் 4 தசாப்தங்களுக்கு மேலாக இலக்கியப் பணியாற்றி வருகின்றார்.



இவர் பென் கிளப், கண்டி தமிழ் சங்கம், கண்டி முத்தமிழ் சங்கம் போன்ற அமைப்புக்களில் இணைந்து இலக்கியச் செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்டி வருபவர். மலையகப் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக ஓர் ஆசிரியையாகவும் அதிபராகவும் இருந்து கல்விச் சேவையாற்றியவர்.

இஸ்மாலிஹாவின் கவிதைகளில் அதிகமானவை மலையக மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் எழுப்புகின்ற கவிதைகளாகக் காணப்படுகின்றன.

அதேபோன்று, மலையகப் பெண்கள் தோட்டத் தொழிற் துறைகளில் எதிர்நோக்குகின்ற எதிர்ப்புக்குரல்கள் எதிரொலிக்கின்றன. அதேபோன்று சிறுகதைத் துறையிலும் மலையக மக்கள் சார்ந்த படைப்புக்களையே அதிகளவு தந்துள்ளார்.

அரசினால் கலை இலக்கியத் துறை சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உயர் கலாபூசணம் விருது அவருக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவருடைய கவிதைகள் சில பல்மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிக்கொணரப்பட்டுள்ளன. இன மத சமய வேறுபாடுகளுக்கப்பால் எல்லோருடனும் மிக நேசத்துடன் பழகக் கூடிய ஒருவர். இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி

**இலங்கையில் கலை, இலக்கியத் துறை சார்ந்த கலைஞர்களுக்கு வழங்கப்படும் அதி உன்னதமான அரச உயர் விருதான கலாபூசணம் வழங்கப்பட்டமை தொடர்பில் உங்கள் மனோ நிலை?**

உண்மையிலேயே நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பார்கள். இத்தனை காலமும் சமூகத்தில் காலாகாலமாக இடம் பெறுகின்ற பல்வேறு மனத்தாக்கங்களையும் சம்பவங்களையும் கவிதைகளாக சிறைகதைகளாகவும் வெளிக்கொணர்ந்தமைக்கு கிடைத்த பரிசாக நான் இந்த கலாபூசணம் விருதை மதிக்கின்றேன். உண்மையிலேயே நான் யாருக்காக அந்த இலக்கியத்தைப் படைத்தேனோ அந்த மக்களுக்கு கிடைத்த பரிசாகத்தான் இந்த கலாபூசண விருதைப் பார்க்கின்றேன். இலக்கிய வளர்ச்சி கல்வெட்டு ஓலைச் சுவடிகளில் இருந்து அச்சு ஊடகம் என்ற நிலையில் இருந்து மாறி சமூக வலைத் தளங்களில் கவிதைகள் இலக்கிய ஆக்கங்கள் வெளிக்கொணரப்படுவதில் பாரிய மாற்றம் பெற்ற கால கட்டத்தில் இந்த விருதைப் பெற்றுக் கொண்டேன் என்பதில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**உங்களுடைய ஆரம்ப வாழ்வியல் குறித்து கூற முடியுமா?**

பச்சை நிற தேயிலைத் தோட்டங்களும், மலைகளும் சூழ்ந்த இயற்கை அழகு நிறைந்த மலை நாட்டின் புசல்லாவையில் நான் பிறந்தேன். தற்போது கண்டியை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றேன். என் தந்தை சேகுதாவுத் இந்திய திருநெல்வேலியைச் சேர்ந்தவர். தாயார் சித்தி ரசீதா இறம்பொடையைச் சேர்ந்தவர். முன்னாள் கிராமசேவகர் பீர்முகம்மதுவின் மகள்.

புசல்லாவை பரிசுத்த திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்றேன். 1977–2012 வரை மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள க/ரோத்சைல்ட் தமிழ் வித்தியாலயம், க/கலுகல்ல தமிழ் வித்தியாலயம், க/யோகலக்சுமி தமிழ் வித்தியாலயம் ஆகிய அரசாங்கப் பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்று தற்போது தனியார் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமை புரிகின்றேன்.

அந்த வகையில் என்னுடைய கலை இலக்கிய முயற்சியின் ஊடாக மலையக பெண் எழுத்தாளர்கள் வரிசையில் என் மேதா விலாசத்தையும் பதிவு செய்து கொண்டேன். நான் இலக்கியத் துறையில் மட்டுமல்லாது கலைத் துறையிலும் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றேன்.

**அப்படியானால் உங்களுடைய இலக்கிய முயற்சிகள் தொடர்பு பற்றிக் கூறுவீர்களா?**

எனது எழுத்துப்பயணம் 1984ல் காங்கிரஸ் பத்திரிகையில் எழுதிய 'பயணம் முடியவில்லை' என்ற சிறுகதை மூலம் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து இதயம் ஊமையல்ல, பொங்கியது பாலல்ல போன்ற கதைகளையும் தொடர்ந்து எழுதினேன்.

பின்பு தினகரன், வீரகேசரி, தினக்குரல், ''நான்''நெத்' குன்றின் குரல் ஆகிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் என்னுடைய ஆக்கங்கள் வெளிவந்தன. 'ஒரே மண்' என்ற சிறுகதை 1992ல் பிரான்ஸ் நாட்டில் இருந்து வெளிவந்த 'பாரீஸ் முரசு' என்ற பத்திரிகையில் வெளிவந்தது. ஆரம்ப காலத்தில் வானொலிக்கும் நான் எழுதியுள்ளேன். அத்துடன் 'துரைவி' பதிப்பகத்தாரின் 'உழைக்கப் பிறந்தவர்கள்' என்ற தொகுப்பில் (1994) 'அப்பாவுக்குக் கல்யாணம்' என்ற சிறுகதை வெளிவந்தது.

அந்தனி ஜீவாவின் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பில் 'காயாம் பூவும் வாழை மரமும்' என்ற சிறுகதையும் இடம் பெற்றுள்ளது. சுவிஸ் நாட்டின் ஊடறு வெளியீட்டின் 'மை' என்ற கவிதைத் தொகுதி, சுவிஸ் நாட்டின் பெண்கள் சந்திப்பு மலர் 2005 ஆகிய கவிதைத் தொகுதிகளிலும் என்னுடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளன. அத்துடன் பல்வேறு கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கியும், கவிதை பாடியும் உள்ளேன். அகிலம் வெள்ளிவிழா சிறப்பு மலரிலும், முத்தையா அவர்களின் பவளவிழா மலரிலும், நூருல் அய்ன் நஜ்முல் ஹுசைனின் மின்னும் தாரகைகள் எனும் நூலிலும் எனது கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கமும் 'மாவத்த' சஞ்சிகை வெளியீட்டாளரும் கூட்டாக வெளியிட்ட சிங்கள கவிஞர் பராக்கிரம கொடிதுவக்குவினால் மொழி பெயர்க்கப்பட்ட 'இந்து சா லங்கா'' பிபிதென பெய' ஆகிய நூல்களிலும் இவரது கவிதைகள் சிங்கள மொழியில் இடம்பெற்றுள்ளன. தமிழில் 'விழிப்பு' என்ற சஞ்சிகை வெளிவந்தது.

மத்திய மாகாண சாகித்திய விழா மலரில் 'காயாம் பூவும் வாழை மரமும்' என்ற சிறு கதை பிரசுரமானது. இச் சிறுகதை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் நடாத்திய போட்டியில் பரிசு பெற்ற கதையாகும்.

ஹிஸ்புல்லாஹ் பௌண்டேஷன் ஏற்பாட்டில் காத்தான்குடியில் வெளியிப்பட்ட 'நதியைப் பாடும் நந்த வனங்கள்' என்ற நூலிலும் எனது கவிதை இடம் பெற்றதோடு அங்கே பொற்கிழி வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டேன்

ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்த காலங்களில் பாடசாலையில் தமிழ்மொழி மேம்பாட்டிற்காக பல்வேறு கலை இலக்கிய பங்களிப்புக்களையும் சேவைகளையும் செய்துள்ளேன். தமிழ்த் தினப் போட்டிகளுக்காக நாடகங்கள் எழுதியும், பாடல்கள் எழுதியும், பழக்கியும் பல பரிசுகளை மாகாண மட்டத்தில் பாடசாலை பெறுவதற்கு உந்து சக்தியாக இருந்துள்ளேன்.

மரபுக்கவிதைகள் எழுதுவதில் மட்டுமன்றி புதுக்கவிதைகள் எழுதுவதிலும் அதிக ஆர்வம் காட்டி கணிசமானளவு கவிதைகள் எழுதியுள்ளேன். நான் கடமையாற்றிய அரசாங்க தமிழ் மொழி பாடசாலைகளின் வளர்ச்சிக்கு என்னால் இயன்ற ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கியுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது. வெகு விரைவில் கவிதைத் தொகுதி ஒன்றை வெளிக் கொணரவுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**உங்ளுக்கு கலைத் துறையில் ஈடுபாடு ஏற்படுவதற்கான காரணம் என்ன?**

என் கணவர் காலஞ்சென்ற ஏ. ராஜா இலங்கையில் ஒரு புகழ்பெற்ற கலைஞராகத் திகழ்ந்தவர். பல்வேறு திறமைகளைக் கொண்டவர். இது எனது சகல கலை இலக்கிய வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தார். அரசாங்கப் பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்று தற்போது தனியார் பாடசாலை ஒன்றில் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளேன். தனது ஆக்கங்களை நூல்களாக வெளியிட உத்தேசித்துள்ளேன்.

நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளையும், இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளேன். நூல் வெளியீட்டு விழாக்களின் போது பல நூல்களுக்கு விமர்சன உரைகள் நிகழ்த்தியுள்ளேன்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'சாமிளாவின் இதய இராகம்' என்ற திரைப்படத்திற்கு நானும் எனது கணவரும் பல பாடல்களை எழுதியுள்ளோம்.

**இத்துறையின் மூலம் உங்களுடைய பெறுமானங்கள் எவை?**

1996 இல் கலைஞர் விருது, 1996 2019 இல் இரத்தின தீப விருது, 25 வருட இலக்கிய சேவைக்காக 'தினகரன்' விருது, 2014ல் ஹிஸ்புல்லாஹ் பவுண்டேசன் பொற்கிழியும் விருதும், 1997 இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நடத்திய சிறுகதை போட்டிக்கான பரிசு, ரோட்டரி கிளப் நடத்திய கண்டி சுற்றாடல் மேம்பாடு தொடர்பான போட்டியில் முதல் பரிசு, கலாபூசணம் விருது, கண்டி நூலகம் நாடத்திய சிறுகதைப்



போட்டியிலும் முதல் பரிசு என பரிசில்களும் சான்றிதழ்களும் விருதுகளும் கிடைத்துள்ளன.

இன்னும் என் எழுத்து பயணம் முடியவில்லை. இன்னும் எழுதிக் கொண்டுதான் இருக்கின்றேன்.

**நீங்கள் மலையகத் தோட்டப்புற கல்விச் சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்பு பற்றி கூறுவீர்களா?**

நான் முதன் முதலில் ஆசிரியர் தொழிலைப் பெற்றுக் கொண்டு மலையக தமிழ் தோட்டப்புற ரோத் சைல்ட் தமிழ் பாடசாலைக்கு ஆசிரியையாக நியமனம் செய்யப்பட்டேன். ஆரம்பத்தில் அத்தொழிலை செய்வதற்கு தந்தை அனுமதிக்கவில்லை. அது அதி கஷ்டப் பிரதேச பாடசாலையாகும். பயணம் போக்குவரத்து வசதிகள் இல்லை. ஆனாலும் தந்தை முதலில் அனுமதிக்க வில்லை. அப்பொழுது கல்வி அதிகாரியாக கடமையாற்றிய சலீம் தந்தையைச் சந்தித்து எடுத்துக் கூறினார். அத்துடன் அப்பிரதேச தோட்டப்புற பொற்றோர்களும் வீடு தேடி வந்து கட்டாயம் கடமையாற்ற வேண்டும் என வேண்டிக் கொண்டார்கள்.

பின்னர் நான் கற்பிப்பதற்காக பாடசாலைக்கு சென்றேன். அப்பொழுது அங்கு பாடசாலை சென்றால் பாடசாலைக்கு பிள்ளைகள் வரவு றொம்பக் குறைவு. 10 அல்லது 15 பிள்ளைகள் தான் வருவார்கள். பாடசாலைக்கு பிள்ளைகளை வரும்படி கோரி லயன்களுக்குள் செல்ல வேண்டும். அவர்கள் பாடசாலை வராமல் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அப்படி லயன்களுக்கு சென்று அவர்களுடைய பெற்றோர்களை சந்தித்து கல்வியின் பெறுமானத்தை அவர்களுக்கு எழுத்துக் கூறி பாடசாலை மாணவர்களை மீளவும் இணைத்துக் கொள்வோம். அவர்கள் கொஞ்ச நாள் வருவார்கள். பின்னர் வரமாட்டார்கள். அந்த மாணவனின் லயன்களுக்கு திரும்ப போக வேண்டும். இப்படி அரச தோட்டப் பாடசாலைகளில் லயன்களுக்குச் சென்று பிள்ளைகளை அழைத்து வந்துதான் பாடம் புகட்ட வேண்டும்.இந்த நிலைமையில் முதன் முதலாக புசல்லாவ கலுகல்ல தமிழ் தோட்டப்புற பாடசாலைக்கு அதிபராகப் பொறுப் பேற்றுச் சென்றேன். ஆரம்பத்தில் பாடசாலை மூடப்பட்டிருந்தது. **மலையக மாணவர்களின் எதிர்கால நலனை மனத்திற் கொண்டு அவர்கள் பாடசாலை வராமை இருப்பதற்கான காரணம் யாவை? யார் பாடசாலை செல்வதற்கு தடையாக இருக்கின்றார்கள்? அவர்களுக்கு எவ்வாறு கல்வி ஆர்வத்தை ஊட்டினால் பாடசாலைக்கு சமூகமளிப்பார்கள்? அற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?** என்பன பற்றி கண்டறிந்து பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுத்தேன்.

அங்கு ஒரு குறிப்பிட்ட 15 மாணவர்கள் மட்டும் தான் சமுகமளித்துக் கொண்டிருந்தார்கள். பாடசாலையில் மாணவர்களின் வரவை அதிகரிக்கச் செய்யும் யுக்திகளைக் கையாண்டு செயற்பட்டேன். நான் பாடசாலை விட்டு இன்னுமொரு அதிபரிடம் கைமாறி வரும் போது 200 மாணவர்கள். அது மட்டுமல்ல அப்பாடசாலையின் பௌதீக வளங்கள் ஆசிரியர் வளங்கள் என சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுத்தேன். கல்வி வளர்ச்சியின் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தகுதிகளையும் வளங்களையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றேன் என்ற மனத்திருப்தியுடன் கூடிய இலக்கியப் பயணத்திலும் சாதனைகளை நிலை நாட்டியுள்ளேன் என்று குறிப்பிடலாம்.

**இதன் போது உங்களது ஸ்ரீலங்கா பென் கிளப்பைச் சோந்தவர்கள் யார் யார் கௌரவிக் கப்பட்டனர் என்று கூறுவீர்களா?**

ஸ்ரீலங்கா பென் கிளப்பின் தலைவி மசூரா ஏ. மஜீத், மர்ளியா சக்காப் இஸ்லாமியச் செல்வி அரபா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இதில் கடந்த வருடம் இந்த ஆளுமை விருதைப் பெற்றுக் கொண்ட ஸாமென் கமருன் நிஸாம்டீன் ஆகியோர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக்ஸ் வோஸ் கலந்து கொண்டதுடன் விசேட அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், பாராளுமன்ற உறுப்பினர்களான வி. இராதாகிருஸ்ணன், வேலுக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நேர்காணல் இக்பால் அலி



## 'மருதூர்க் கொத்தனின் நினைவுகளின் தேரோட்டம்' நூல் வெளியீட்டு விழா



கலாநிதி செ. சுதர்சன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி ஆகியோரைப் பதிப்பாசிரியராகக் கொண்ட 'மருதூர்க் கொத்தனின் நினைவுகளின் தேரோட்டம்' கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழா இன்று கண்டி டி. எஸ். சேனநாயக வீதி, அசோக வித்தியாலயத்திற்கு முன்னால் அமைந்துள்ள செல்லத்துரை ஞாபகார்த்த மண்டபத்தில் பி. ப. 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு மலையகக் கலை கலாசாரச் சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் தலைமை தாங்குவார். மேலும் பிரதம விருந்தினராக இந்தியா தமிழ்நாடு, தஞ்சாவூர், தமிழ் பல்லைக்கழகத்தின் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை பேராசிரியர். கு. சின்னப்பன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வரவேற்புரையை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ.இராமனும் வெளியீட்டு உரையை பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சனும், நூல் அறிமுகவுரையை பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் துரை மனோகரன், ஏற்புரையை இக்பால் அலி, நன்றியுரையை மலையக கலை கலாசார சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ராஜா ஜெகின்ங்ஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

## மடூல்சீமையிலிருந்து பிட்டமாறுவை செல்லும் வீதி புனரமைப்பு



மடூல்சீமையிலிருந்து ராகல ஊடாக பிட்டமாறுவை வரை செல்லும் பிரதான வீதியை செப்பனிடும் பணிகள் நேற்றுமுன்தினம் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷினால் ஆரம்பிக்கப்பட்டன.

ராகலையிலிருந்து பிட்டமாறுவை வரை சுமார் 7 கிலோமீற்றர் தூரத்தை கொண்ட இவ்வீதி பலவருடங்களாக குண்டும் குழியுமாக காணப்பட்டது. இதனால் இப்பாதையில் செல்லும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம்கொடுத்தனர். இதனையடுத்து குறித்த வீதியை செப்பனிடுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், போக்குவரத்துதுறை அதிகாரிகள், பிரதேசமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## கண்டி மாவட்டத்தில் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம்

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி மாவட்டத்தில் மீண்டும் டெங்கு நோய் தலைதூக்குவதாக டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடம் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 1418 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டுமென டெங்கு ஒழிப்புப் பிரிவு கேட்டுள்ளது.

## மெததும்பறை பிரதேசசபை வர்த்தகக் கட்டடத் தொகுதி திறந்துவைப்பு

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி, மெததும்பறை பிரதேசசபையின் வர்த்தகக் கட்டடத் தொகுதி அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவினால் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழா வைபவத்தில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார இராஜாங்க அமைச்சர் அனுராதா ஜயரத்ன, மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான சட்டத்தரணி சுனில் அமரதுங்க, லின்டன் விஜேசிங்க, மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க, ஆளுநர் செயலாளர் மஞ்சுலா மடஹபொல உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெறுகை அறிவித்தல்

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வைத்தியசாலை உணவக கட்டிடத்தொகுதியின் விற்பனை சாலைகளை நடத்திச் செல்லல்

01. தங்கியிருக்கும் நோயாளர்கள், வைத்தியசாலைக்கு வருகைதரும் நபர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் பாவனைக்காக நுகேகொட, தலபத்பிட்டியவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் உணவக கட்டிடத்தொகுதியில் கீழ்க்காணும் விற்பனை சாலைகளை நடத்திச் செல்லும் ஆற்றல் உடைய இலங்கைப் பிரஜைகள், வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து (ஒப்பந்தக்காரர்கள்) ஒரு வருட காலத்திற்கு தேசிய போட்டி விலைமனுக்கோரலின் கீழ் பெறுகைக்குழுவின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | இலக்கம் | விற்பனை சாலையின் பெயர் | குறைந்த பட்ச மாதாந்த வாடகை ரூபா | கேள்விப் பிணை ரூபா | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | Q - 162/24 | பழச்சாறு மற்றும் பழக்கலவை விற்பனை சாலை | 86,000.00 | 10,000.00 | 3500.00 |
| 2 | Q - 163/24 | சில்லறைப் பொருட்கள் விற்பனைசாலை | 230,000.00 | 15,000.00 | 3500.00 |
| 3 | Q - 164/24 | சமைக்கப்பட்ட உணவு விற்பனைசாலை | 172,000.00 | 20,000.00 | 3500.00 |

02. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத விண்ணப்ப படிவக்கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் பணிப்பாளருக்கு விடுக்கப்படும் எழுத்துமூல வேண்டுதலை வழங்கல்கள் பிரிவிற்கு சமர்ப்பித்து 15.05.2024 வரை வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் கேள்விப் பத்திரங்களை வழங்கல்கள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. குறித்தவாறு கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையை இட்டு விண்ணப்பங்களை கடித உறையொன்றில் உட்படுத்தி அதன் இடதுபக்க மேல் மூலையில் "2024-2025ம் ஆண்டிற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை ....................... குறித்த விற்பனை சாலையின் பெயர்) விற்பனை சாலையை நடத்திச் செல்லும் ஒப்பந்தம்" என்று குறிப்பிட்டு 16.05.2024 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு இங்கு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரத்தின் பின்பு உடனடியாக விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் திறக்கப்படாமலேயே மீள ஒப்படைக்கப்படும்.

05. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

06. உத்தேச விண்ணப்பதாரர்களுக்கு கேள்விப் பத்திரங்களை எந்தக்கொடுப்பனவும் இன்றியே ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் பரீட்சிக்கலாம்.

07. மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே.இலக்கம் : 011-2778610 - நீடிப்பு 3142 அல்லது 011-2778624

மின்னஞ்சல் முகவரி : suppliceofficefficesjgh@gmail.com

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**
**தலபத்பிட்டிய, நுகெகொடை**



---

கடற்றொழில் அமைச்சு

### வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

## கொள்முதல் அறிவித்தல்

### காலி மீன்பிடித் துறைமுகத்தில் முன்மொழியப்பட்ட நீர்த் தாங்கி கட்டமைப்பினை புனரமைத்தல்.

**கொள்முதல் இலக்கம் : CFHC/PD/T/WTR TNK/GALLE/2024/24**

- திரு. லச்செட்டி 2006ஆம் ஆண்டு சிற்றியில் இணைந்து 2021 பெப்ரவரியில் தற்போதய பதவியைப் பொறுப்பேற்றார். அதற்கு முன்னர், அவர் ஆசியா மற்றும் EMEA பிராந்தியங்களில் வாடிக்கையாளர் வங்கி பிரதானியாகக் கடமையாற்றினார். ஆசிய சிற்றளவு வங்கிச் சேவை பிரதானி, வளங்கள் முகாமைத்துவம் மற்றும் காப்புறுதியின் உலகளாவிய பிரதானி ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளார். திரு. லச்செட்டி, சிற்றியில் இணைவதற்கு முன்னர் JPMorgan Chase and Bain & Companyக்காக பணியாற்றினார்.

- திரு. மெக்கின்டொஷ் 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் தனது தற்போதய பதவியிலேயே சிற்றியில் இணைந்துகொண்டார். அதற்கு முன்னர், அவர் 2019 முதல் 2021 வரை ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரியில் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளராகப் பணியாற்றினார். 2017க்கும் 2019க்கும் இடையே அவர் ஐக்கிய அமெரிக்க திறைசேரியின் பொது ஆலோசகராகச் சேவையாற்றினார். திரு. மெக்கின்டொஷ் அதற்கு முன் Sullivan & Cromwell என்ற சட்ட நிறுவனத்தின் பங்காளியாக இருந்ததுடன், 2006 முதல் 2009 வரை ஐக்கிய அமெரிக்க வெள்ளை மாளிகையில் பணியாற்றினார்.

- திரு. மோர்டன் 2008ஆம் ஆண்டு சிற்றியில் இணைந்து 2022 மார்ச்சில் தற்போதய பதவியைப் பொறுப்பேற்றார். தற்போதய பதவிக்கு முன்னர், அவர் 2019 நவம்பரில் சந்தைகளின் இணைப் பிரதானியாக நியமிக்கப்பட்டார். அதற்கு முன் அவர் G10 வீதங்கள் மற்றும் நிதியிடல் வியாபாரங்களின் பிரதானியாக இருந்தார். சிற்றியில் இணைவதற்கு முன்னர், திரு. மோர்டன் 15 ஆண்டுகளாக Lehman Brothersஇல் சேவையாற்றினார். அவர் அங்கு நிலையான வருமானத்தின் ஐரோப்பிய பிரதானி, நிலையான வருமானத்தின் உலகளாவிய பிரதானி என்பன உள்ளிட்ட பல பதவிகளை வகித்தார்.

- திரு. ஒக்பரா 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தனது தற்போதய பதவியிலேயே சிற்றியில் இணைந்துகொண்டார். அதற்கு முன்னர், அவர் 2016 தொடக்கம் ஆழசபயெ ளுவயடெநல நிறுவனத்தில் முகாமைத்துவப் பணிப்பாளர், நிதித் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வின் உலகளாவிய பிரதானி, உட்கட்டமைப்புக் குழுமங்களின் பிரதம நிதி அதிகாரி, ஆகிய பதவிகளை வகித்தார். திரு. ஒக்பரா அதற்கு முன்னர் கெப்பிட்டல் வன் ∴பினான்'ல் கோப்பரேஷனில் முகாமைத்துவ உப தலைவர், நிதி மற்றும் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஆகிய பதவிகளில் பணியாற்றினார்.

- திரு. செல்வகேசரி 1991ஆம் ஆண்டு சிற்றியில் இணைந்து 2021 ஜனவரியில் தற்போதய பதவியைப் பொறுப்பேற்றார். அதற்கு முன்னர், அவர் 2018 ஒக்டோபர் தொடக்கம் ஐக்கிய அமெரிக்க கொமர்'ல் வங்கியின் பிரதானியாகக் கடமையாற்றினார். அதற்கு முன்னர், திரு. செல்வகேசரி சிற்றி நிறுவனத்தில் வேறு பல பதவிகளை வகித்தார். 2015 முதல் 2018 வரை அவர் ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான நுகர்வு வங்கிச் சேவைப் பிரதானியாக இருந்தார். ASEAN மற்றும் இந்தியாவுக்கான நுகர்வு வங்கிச் சேவைப் பிரதானி போன்ற பல பிராந்தியப் பதவிகளில் பணியாற்றினார். சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பீன்ஸ், தாய்லாந்து, வியட்னாம், இந்தியா ஆகிய நாடுகளில் நுகர்வு வங்கிச் சேவை வியாபாரங்களுக்கும் அவர் தலைமை தாங்கினார்.

- திரு. சீக் 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் தனது தற்போதய பதவியிலேயே சிற்றியில் இணைந்துகொண்டார். அதற்கு முன் அவர் மெரில் செல்வ முகாமைத்துவத்தின் தலைவராகப் பணியாற்றியதுடன், செல்வ முகாமைத்துவ வியாபாரத்தில் மூலோபாயம், வங்கித் திட்டங்கள் மற்றும் தலைமைத்துவத் துறையில் பல சிரேஷ்ட பதவிகளை வகித்தார். 2005க்கும் 2009க்கும் இடையே, சிற்றியில் சிரேஷ்ட செல்வ முகாமைத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. சீக், தனது தொழில் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் வெள்ளை மாளிகையில் பொருளாதாரம் மற்றும் உள்நாட்டுக் கொள்கை தொடர்பான விடயங்களில் அமெரிக்க ஜனாதிபதியின் உதவியாளருக்கான துணையாளியாகச் செயற்பட்டார்.

- திரு. டொரெஸ் கன்ரு 1989ஆம் ஆண்டு சிற்றியில் இணைந்து 2019 ஒக்டோபரில் தற்போதய பதவியைப் பொறுப்பேற்றார். அதற்கு முன்னர், அவர் 2014 தொடக்கம் Citibanamex நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றினார். 2006 முதல் 2011 வரை மெக்ஸிகோவிலுள்ள GCBஇன் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் 2003 முதல் 2006 வரை Crédito Familiar நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் அவர் செயற்பட்டார். அதற்கு முன் அவர் Citibanamex நிறுவனத்தில் பிராந்தியப் பணிப்பாளர், பிரிவுப் பணிப்பாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

- திரு. டுரெக் 1991ஆம் ஆண்டு சிற்றியில் இணைந்து 2021 பெப்ரவரியில் தற்போதய பதவியைப் பொறுப்பேற்றார். 2020 டிசெம்பரில் சிற்றியின் இடைக்கால பிரதம இடர் அததிகாரியாகப் பெயரிடப்படுவதற்கு முன்னர் அவர் EMEA பிரதம இடர் அதிகாரியாகக் கடமையாற்றினார். திரு. டுரெக் அதற்கு முன்னர் சிற்றிபாங்க் ஐரோப்பாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட பல பதவிகளை வகித்ததுடன், ற்'யா, தென்னாபிரிக்கா, ஹங்கேரி ஆகிய நாடுகளில் சிற்றியின் செயற்பாடுகளுக்கும் தலைமை தாங்கினார்.

**நடத்தை விதிக் கோவை மற்றும் நெறிமுறை விதிக் கோவை**

மிகவுயர்ந்த நடத்தைத் தராதரங்களுக்குத் தன்னை அர்ப்பணித்த நடத்தை விதிக் கோவை ஒன்றை சிற்றி கொண்டுள்ளது. நடத்தை விதிக் கோவைக்கு மேலதிகமாக நிதித் தொழில் உயர் அதிகாரிகளுக்கான (கணக்காளர்கள், கட்டுப்பாட்டாளர்கள், நிதி அறிக்கையிடல் செயற்பாட்டாளர்கள், நிதித் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வாளர்கள், திறைசேரி, மூலதனத் திட்டமிடல், வரி, உற்பத்தித் திறன் மற்றும் மூலாபாயம், M&A, முதலீட்டாளர் உறவுகள் தொடர்பான அலுவலர்கள், பிராந்திய∴புரடக்ட் நிதி அதிகாரிகள் மற்றும் நிர்வாக அலுவலர்கள்) நெறிமுறை விதிக் கோவை ஒன்றும் உள்ளது. இந்த நெறிமுறை விதிக் கோவை உலகளாவிய ரீதியில் பிரயோகிக்கப்படுகின்றது. சிற்றியின் பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதான கணக்கியல் அதிகாரி ஆகியோருக்கும் இது பொருந்தும். நிதித் தொழில் உயர் அதிகாரிகளின் நெறிமுறைக் கோவைக்கான ஏதேனும் திருத்தங்கள் அல்லது விலக்களிப்புகள் இருந்தால், அவை www.citigroup.com என்ற சிற்றியின் வலைத்தளத்தில் வெளியிடப்படும்.

நடத்தை விதிக் கோவை, நிதித் தொழில் உயர் அதிகாரிகளுக்கான நெறிமுறை விதிக் கோவை ஆகிய இரண்டையும் சிற்றியின் வலைத்தளத்தில் பார்க்கலாம். முதலில் "About Us" என்பதையும் பின்னர் "Corporate Governance" என்பதையும் கிளிக் செய்யவும். சிற்றியின் நிறுவன ஆளுகை வழிகாட்டுதல்களையும் சிற்றிகுரூப் பணிப்பாளர்கள் சபையின் கணக்காய்வுக் குழு, ஒழுக்கநெறி, நடத்தை மற்றும் கலாசாரக் குழு, நியமன, ஆளுகை மற்றும் பொது விவகாரக் குழு, ஆளணி மற்றும் இழப்பீட்டுக் குழு, இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் சாசனங்களையும் இந்த வலைத்தளத்தில் பார்வையிடலாம். Citigroup Inc., Corporate Governance, 388 Greenwich Street, 17th Floor, New York, New York 10013 என்ற முகவரிக்கு எழுதுவதன் மூலமும் இந்த விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு**

**தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**IDA Credit No.: P163742**

**2024** ஏப்ரல் 09 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனு விளம்பரத்தில் **CIDA** பதிவு செய்தலின் வரம்பெல்லை மற்றும் துறை ஆகியன கீழேயுள்ளவாறு திருத்தப்படல் வேண்டுமென அன்புடன் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

0.5 கிமீ விவசாய வீதி திக்கம்பொத்தான சந்தியிலிருந்து சூட்டடிக்கும் தரை மற்றும் மேல்நாட்டு பயிர்ச்செய்கைகள் (1 ஆம் தொகுதி) மேம்படுத்தல், 1.4 கிமீ விவசாய வீதி மீமின்னாவலயிலிருந்து கிரிமெட்டியாவ குளம் (தொகுதி 2) கூன்வெவ விவசாய வீதி அபிவிருத்தி திட்டம் வட மத்திய மாகாணத்தில் ஆகியவற்றின் மேம்படுத்தல் ஆகியன – **CSIAP** பெறுகை இல.: **LK-MOA-415248-CW-RFB-NCP/24/09**

| தொகுதி இல. | வேலைகளின் விளக்கம் | CIDA பதிவுத் தரம் மற்றும் துறை | விலைமனுப் பிணை தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு | நிர்மாணக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| **தொகுதி 01** | வமமா-CSIAP கூன்வெவ ASC பிரிவு விவசாய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 0.5 கிமீ விவசாய வீதி திக்கம்பொத்தான சந்தியிலிருந்து சூட்டடிக்கும் தரை மற்றும் மேல்நாட்டு பயிர்ச்செய்கைகள் மேம்படுத்தல்கள் | சி-8 அல்லது மேற்பட்டது நெடுஞ்சாலைகள் நிர்மாணம் | 50,000 ரூபா. 2024 ஒகஸ்ட் 13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம் | 3 மில். | 45 நாட்கள் | |
| **தொகுதி 02** | வமமா-CSIAP கூன்வெவ ASC பிரிவு விவசாய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1.4 கிமீ விவசாய வீதி மீமின்னாவலயிலிருந்து கிரிமெட்டியாவ குளம் வரையிலான மேம்படுத்தல் | சி-7 அல்லது மேற்பட்டது நெடுஞ்சாலைகள் நிர்மாணம் | 100,000 ரூபா. 2024 ஒகஸ்ட் 13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம் | 6 மில். | 45 நாட்கள் | 5000 ரூபா |

**தலைவர்,**
**கீழ் மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழு (வட மத்திய மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான விவசாய நீர்ப்பாசன திட்டம்,**
**செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (வட மத்திய மாகாணம்),**
**இல. 393/6, லேக் வீதி, 1 ஆம் படிமுறை, அநுராதபுரம்.**
**திகதி: 2024.04.25**

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுமானப் பணிகளுக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்திற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   - I. RDA/SP/1500km/WP/69 - வல்பொல வீரரத்ன மாவத்தையை மேம்படுத்தல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு நீர்க்கொழும்பு
   - II. RDA/SP/1500km/WP/70 - கந்தானை கனேகொட வீதியை மேம்படுத்தல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு நீர்க்கொழும்பு
   - III. RDA/SP/1500km/WP/71 - ஜெசிட்டாவத்தை பிரதான வீதியில் அம்பலம குளத்துக்கு அருகிலிருந்து கூட்டுறவுச் சபை வரை மேம்படுத்துதல் - நிறைவேற்றுப் பொறியியல் பிரிவு நீர்க்கொழும்பு
   - IV. RDA/SP/1500km/WP/89 - கலோட்டுவாவ ஈரியகொல்ல வீதியை மேம்படுத்தல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு நிட்டம்புவ
   - V. RDA/SP/1500km/WP/90 - உடுபில சிறிய விகாரைக்கு அருகில் வீதியை மேம்படுத்தல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு கம்பஹா
   - VI. RDA/SP/1500km/WP/91 - மாபோதல தெற்கு அரைக்கும் ஆலை சந்தி நாகஹவத்த வீதியை மேம்படுத்தல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு கம்பஹா
   - VII. RDA/SP/1500km/WP/92 - இஹல பியான்வில புலுகாவத்த வீதியை மேம்படுத்துதல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு கம்பஹா
   - VIII. RDA/SP/1500km/WP/93 - வேபட மயான வீதியை மேம்படுத்துதல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு கம்பஹா
   - IX. RDA/SP/1500km/WP/94 - சம்பாய மாவத்தை கடைசி பிரிவினை வீதியை மேம்படுத்துதல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு கம்பஹா
   - X. RDA/SP/1500km/WP/95 - குரும்பலபிட்டிய வீதியை மேம்படுத்துதல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு கம்பஹா
   - XI. RDA/SP/1500km/WP/114 - ஒத்தரவாடிய கொடெல்லவத்த மெத மாவத்தையை மேம்படுத்துதல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு நீர்க்கொழும்பு
   - XII. RDA/SP/1500km/WP/115 - 46/கீழ் மடித்தியவெல, மெதிகெலெல்வத்தயிலிருந்து லுனுமிதெல்ல வத்தை ஊடாக வல்பிட்ட தேசட்ட வீதியை மேம்படுத்துதல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு நீர்க்கொழும்பு
   - XIII. RDA/SP/1500km/WP/113 - நெமுங்கஹஹேன விகாரை வீதியில் அமர மாவத்தையை மேம்படுத்துதல் - நிறைவேற்று பொறியியல் பிரிவு கம்பஹா

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக பொருட்களை வழங்கல்

2. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா மாவட்டத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்தில் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   - I. RDA/SP/1500km/WP/96 - நீர்க்கொழும்பு நிறைவேற்று பொறியியல் பிரிவிற்கு Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல்
   - II. RDA/SP/1500km/WP/97 - கம்பஹா நிறைவேற்று பொறியியல் பிரிவிற்கு Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல்
   - III. RDA/SP/1500km/WP/98 - நிட்டம்புவ நிறைவேற்று பொறியியல் பிரிவிற்கு Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல்
   - IV. RDA/SP/1500km/WP/99 - கலோட்டுவாவ ஈரியாகொல்ல வீதியை மேம்படுத்துவதற்காக Grade 30 Readymix Concrete வழங்கல் - நிட்டம்புவ நிறைவேற்று பொறியியல் பிரிவு
   - V. RDA/SP/1500km/WP/100 - நீர்க்கொழும்பு நிறைவேற்று பொறியியல் பிரிவிற்கு Grade 30 Readymix Concrete வழங்கல்
   - VI. RDA/SP/1500km/WP/111 - கம்பஹா நிறைவேற்று பொறியியல் பிரிவிற்கு Grade 30 Readymix Concrete வழங்கல்
   - VII. RDA/SP/1500km/WP/112 - நிட்டம்புவ நிறைவேற்று பொறியியல் பிரிவிற்கு Grade 30 Readymix Concrete வழங்கல்

3. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.
   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
   வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**
**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**
**(e-NIC செயற்திட்டம்)**

DRP

## கடைசித் திகதிக்கான கால எல்லை நீடிப்பு

**402 எண்ணிக்கையிலான நேரலை**
**ஊடுகதிர் இயந்திரங்களை (Live Scanners)**
**வழங்கல், விநியோகித்தல் நிறுவல் மற்றும் செயற்படுத்தல்**
**IFB No: DRP/e-NIC/PRO/2024/07**

**2024.03.26** ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி கொள்முதலுக்கான விலைமனுக்கோரலில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி **2024.05.09 ஆம் திகதி பி.ப.2.00 மணி** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொடுக்கப்பட்ட முகவரியில் **2024.05.09 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் மனுக்கள் கிடைத்தவுடன் உடனடியாக திறக்கப்படும்.

தலைவர்,
செயற்திட்ட கொள்முதல் குழு,
**e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
“B” பகுதி, 10 ஆம் மாடி, சுஹூருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.
**2024.04.24**

SELACINE

## கொழும்பு மாநகர சபை

### பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டம் - இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டது

37.5 மில்லியன் அஐ டொலர் ஆகுசெலவில் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கமானது மேற்கொண்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் நோக்கமானது ஓரளவு பூர்த்தி செய்யப்பட்ட இறைக்கும் நிலையங்களை பூர்த்தி செய்வதும் கிருளப்பொன நீரேந்தும் பிரதேசத்தில் இழுக்கும் சக்தியையுடைய பாதாள சாக்கடை வலையமைப்பை பூர்த்தி செய்தலும் மற்றும் நகர கழிவுநீர் வசதியின் ஆற்றலை அதிகரிப்பதாகும். கீழே குறிப்பிட்டுள்ள பதவி நிலைகளுக்காக தனிநபர் உசாத்துணையாளர்களை ஆட்சேர்ப்பதற்காக கொழும்பு மாநகர சபையானது விண்ணப்பங்களை கோருகின்றது.

| பதவிநிலை | பதவி நிலைகளின் எண்ணிக்கை | கல்வித் தகைமை | அனுபவம் |
|---|---|---|---|
| செயற்றிட்ட த்திற்கான ஆலோசகர் | 01 | இலங்கை பொறியியல் சேவைகளின் 1 ஆம் வகுப்பு அலுவலர் அல்லது உரித்தான துறையில் நிகரான நிலை | 1 ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம். கழிவுநீர் மற்றும் நிர்மாண முகாமைத்துவத்தில் 15 வருடங்களுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| ஒப்பந்த விஷே டத்துனர் | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலில் அல்லது அளவை அறிவியலில் பெற்ற இளமாணிப்பட்டமொன்று. | விஞ்ஞானமாணிப் பட்டத்தில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம் அல்லது தேவைப்படுத்தப்படும் விஷேடத்துவத்தில் 13 வருட அனுபவம். |
| வடிவமைப்பு மற்றும் நீர்வியலாளர் | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால அங்கீகரிக்கப்பட்ட பொறியியலில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று | தேவைப்படும் விஷேடத்துவ கற்கை நெறியில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம் அத்துடன் கழிவுநீர் சுத்தப்படுத்தல் பொறித்தொகுதி அல்லது கழிவுநீர் இறைக்கும் நிலையம் அல்லது இழுக்கும் சக்தியையுடைய வலையமைப்புத் திறன். |
| ஆளவை அளவியலாளர் | 01 | அளவை அளவிடலில் இளமாணிப் பட்டமொன்று அல்லது நிகரானது | தேவைப்படுத்தப்படும் விஷேடத்துவத்தில் ஆகக்குறைந்து 5 வருட அனுபவம். |
| GIS அலுவலர் | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிகரான துறையில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று அல்லது தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்நுட்ப/தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும். வயதெல்லை: 50 இற்கு குறைவாகவிருத்தல் வேண்டும். | தேவைப்படுத்தப்படும் விஷேடத்துவத்தில் ஆகக்குறைந்து 5 வருட அனுபவம். |
| செயற்றிட்ட உதவி பொறியியலாளர் (தொழில்நுட்ப அலுவலர்) | 09 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிகரான துறையில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று அல்லது தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும். வயதெல்லை: 50 இற்கு குறைவாகவிருத்தல் வேண்டும். | தேவைப்படுத்தப்படும் விஷேடத்துவத்தில் ஆகக்குறைந்து 5 வருட அனுபவம். |
| பொறிமுறை பொறியியல் விஷே டத்துனர் | 01 | பமாஆ இனால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று | பொறிமுறை பொறியியலில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகள் அல்லது கழிவுநீர் இறைக்கும் நிலையத்தில் 8 வருட அனுபவம். |
| மின்னியல் மற்றும் கருவி பொறியியலாளர் | 01 | மின்சார/இலத்திரனியலில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று அத்துடன் தொழில்சார் பொறியியல் அமைப்பொன்றில் இளமாணிப் பட்டமொன்று. | மின்னியல் பொறிமுறையில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதிகள் அல்லது கழிவுநீர் இறைக்கும் நிலையத்தில் 8 வருட அனுபவம். |
| செயற்றிட்ட செயலாளர் | 01 | கபொத (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியும் ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்ற செயலாளர் கற்கைநெறியொன்றில் சித்தி அல்லது பட்டயம் பெற்ற செயலாளருக்கான பரீட்சைகளில் ஆயத்தம் செய்தல். | நிகரான துறையில் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவம். |

- பொதுவான நிபந்தனைகள்: அனைத்து நியமனங்களும் ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு அமைந்திருப்பதுடன் வருடந்தோறும் ஒப்பந்த அடிப்படையிலமைந்த சேவை நீடிப்பு செயற்றிட்ட காலப்பகுதியில் தங்கியிருப்பதுடன், பதவியின் தேவைப்பாடு மற்றும் திருப்திகரமான செயற்பாடு ஆகியவற்றில் வழங்கப்படும். சம்பளமானது 1/**2019** என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள மட்டத்தில் வழங்கப்படும்.

அரசாங்க துறை அல்லது அரச நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்களின் நிறுவன தலைமை பிரதிநிதிகளூடாக அனுப்புதல் வேண்டுமென்பதுடன் ஆர்வமுள்ள நபர்கள் அவர்களின் சுயதரவை உரித்தான கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களை மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம் என்ற முகவரிக்கு 2024.05.09 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். செயற்றிட்டப் பெயர் மற்றும் பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும்.

**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

# கேள்விக்கான அழைப்பு

## மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

## வட மத்திய மாகாணம்

1. வட மத்திய மாகாண சபையின் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே அட்டவணை இல.01 மற்றும் 02 இல் குறிப்பிடப்படும் மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் (PSDG) மற்றும் கூட்டு வழங்கல் (BG) நிதித் தன்மையின் கீழ் உத்தேச செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்காக தகைமை மற்றும் தகுதி கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்விகோரல் மூலம் இடம் பெறும். செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ.மில்லியன் 50 இற்கு குறைவான படியால் பிரதேச முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை கவனத்தில் கொள்ளும் போது 2024.03.01ம் திகதிய அரச நிதி சுற்றுநிருப இல. 01/2024 பொருத்தமாகக் கொள்ளப்படும்.

**அட்டவணை இல. 01 - மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் (PSDG)**

| தொடர் இல. | பி.செ. பிரிவு | செயற்றிட்ட இலக்கம் | செயற்றிட்டம் | மதிப்பிடப் பட்ட பெறுமதி (ரூபா மில்லியன்) | ஒப்பந்த கால எல்லை (நாட்கள்) | CIDA தரம் | கேள்விப் பிணை (ரூபா) | மீளளிக் கப்படாத கேள்வி ஆவணத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஹொரவ் பொத்தான | 24/650/43/ 08/2005/24 (i)/N/A/03 | 125 கல்பேதுலான ஹப்பவெவ குளம் மறுசீரமைத்தல் | 9.53 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 114,500.00 | 7,000.00 |
| 02 | நொச்சியா கம | 24/630/43/ 08/2005/24 (i)/N/A/05 | 330 பஹல மாரகஹவெவ துலான இஹல தம்மென்னாவ குளம் மறுசீரமைத்தல் | 1 1 .96 | 120 | C6-05 (நீர்ப்பாசனம்) | 144,000.00 | 7,000.00 |
| 03 | திரப்பனே | 24/630/43/ 08/2005/24 (i)/N/A/06 | 553, மூவெல்லாவ மஹவெவ குளம் மறுசீரமைத்தல் | 6.21 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 75,000.00 | 3,500.00 |
| 04 | மிஹிந் தலை | 24/630/43/ 08/2005/24 (i)/N/A/07 | 564, மரதன் கல்ல துலான பஹல முதேவ குளம் மறுசீரமைத்தல் | 14.93 | 120 | C6-05 (நீர்ப்பாசனம்) | 179,500.00 | 7,000.00 |
| 05 | கெக்கிராவ | 24/630/43/ 08/2005/24 (i)/N/A/09 | 611, மாமினியா ரம்பேவ துலான உடஹெட்டியாவ குளம் மறுசீரமைத்தல் | 12.00 | 120 | C6-05 (நீர்ப்பாசனம்) | 144,000.00 | 7,000.00 |

**அட்டவணை இல. 02 - கூட்டு வழங்கல் (BG)**

| தொடர் இல. | பி.செ. பிரிவு | செயற்றிட்ட இலக்கம் | செயற்றிட்டம் | மதிப்பிடப் பட்ட பெறுமதி (ரூபா மில்லியன்) | ஒப்பந்த கால எல்லை (நாட்கள்) | CIDA தரம் | கேள்விப் பிணை (ரூபா) | மீளளிக் கப்படாத கேள்வி வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | கஹடட கஸ்திகிலிய | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/01 | 220 கொஹொம்ப கஸ்கடதுலான போகஹ வெவ் மறுசீரமைத்தல் | 8.44 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 101,500.00 | 7,000.00 |
| 02 | ம.நு.ப. | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/02 | 310 புவரசன்குளம் துலான சியம்பலா வெவ மறுசீரமைத்தல | 6.24 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 75,000.00 | 3,500.00 |
| 03 | கஹடட கஸ்திகிலிய | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/03 | 206 தாவ்வஹல்மில் லேவதுலான வெலிவெவ மறுசீரமைத்தல | 6.96 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 84,000.00 | 3,500.00 |
| 04 | ம.நு.ப. | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/04 | 306 ஹெலம்ப கஸ்வெவ துலான குருன்தன் குளம் வெவ் மறுசீரமைத்தல் | 8.63 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 103,500.00 | 7,000.00 |
| 05 | ம.நு.ப. | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/05 | 306 ஹெலம்ப கஸ்வெவ துலான புதுக் குளம் வெவ மறுசீரமைத்தல் | 8.15 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 98,000.00 | 7,000.00 |
| 06 | நொச்சியா கம | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/06 | 325 அம்பகஹவெவ துலான சியம்பலா கெட்டியாவ குளம் மறுசீரமைத்தல் | 7.47 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 89,500.00 | 3,500.00 |
| 07 | கலென் பிந்துனு வெவ | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/07 | 158 உல்பத்கம துலான எத்தா பெந்த வெவ மறுசீரமைத்தல் | 11.25 | 120 | C6-C5 (நீர்ப்பாசனம்) | 135,000.00 | 7,000.00 |
| 08 | ரம்பேவ | 24/651/43/ 04/1304/22 (x)N/A/08 | 91 கோண கும்புக்வெவ துலான கொஹொம்பகஸ் வெவ மறுசீரமைத்தல் | 7.46 | 120 | C7-C6 (நீர்ப்பாசனம்) | 89,500.00 | 7,000.00 |
| 09 | மிஹிந் தலை | 24/651/43/ 04/1304/22 (x)/N/A/ 43 | 564 பொத்தான துலான பலுகஸ்வெவ மறுசீரமைத்தல் | 12.97 | 120 | C6-05 (நீர்ப்பாசனம்) | 153,500.00 | 5,000.00 |

ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு, கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருப்பதுடன், CIDA பதிவு கேள்வி திறக்கப்படும் தினம் ஆகும் போது செயற்பாடு உடையதாக இருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தம் வழங்குவதறங்காக தகைமை பெறுவதற்கு கேள்வி அட்டவணையின் 4ம் பந்தியில் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
5. இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், வ.ம.மா அநுராதபுரம். (தொ.பே - 025 - 2237586) இடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், கட்டணங்கள் செலுத்தாமலேயே அவ் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
6. அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகையை மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தி அல்லது இலங்கை வங்கி அநுராதபுரக் கிளையில் "மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், வட மத்திய மாகாணம்" பெயரில் உள்ள உத்தியோகபூர்வ கணக்கு இல. 1472633 என்ற கணக்கிற்கு வைப்புச் செய்து வைப்புப் பத்திரத்தை வட மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு ஒப்படைத்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் 2024.04.26 முதல் 2024.05.16 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 பி.ப. 3.30 இற்குமிடையில், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை ஆங்கில மொழியில் பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறாக உறைகளில் இட்டு மீண்டும அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு 2024.05.17 மு.ப. 11.00 இற்கு முன்பு "மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், வ.ம.மா. மைத்திரிபால சேனாநாயக்க மாவத்த, அநுராதபுரம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. சகல கேள்விகளும் 77 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல கேள்வியுடனும் ஒவ்வொரு செயற்றிட்டத்துடனும் சம்பந்தப்பட்ட மேற்படி அட்டவணைகளில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு இலங்கையில் பதிவுசெய்த அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து "மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், வட மத்திய மாகாணம்" பெயரில் பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் இலங்கை வங்கி அநுராதபுரம் கிளையின், " மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், வட மத்திய மாகாணம்" என்ற பெயரில் உத்தியோகபூர்வ கணக்கு இல. - 1472633 என்ற கணக்கில் வரவு வைத்து பெற்றுக்கொண்ட வைப்புப் பத்திரத்தை மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு ஒப்படைத்து பெற்றுக் கொள்ளும் என்.சீ.100 பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை 2024.08.30ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024 மே 13 பி.ப. 2.00 இற்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.
11. இப் பெறுகை பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் வட மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்/ மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**வட மத்திய மாகாணம்.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/PT/04/002 | Desktop Computer (15) 46 Nos. | 98,000.00 | 1,000.00 | 2024.05.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/05/053 | 20 Nos. CR6022J Chain Coupling for Mitsui - Paccco STS Cranes and SHI RTG Cranes at JCT & ECT Yards | 20,000.00 | 1,000.00 | 2024.05.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/08/053 | Marine Paint and Thinner | 40,000.00 | 1,000.00 | 2024.05.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/10/052 | Spares for the Terberg Terminal Tractors | 19,500.00 | 1,000.00 | 2024.05.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/10/047 | Construction materials for civil stores building | 500,000.00 | 12,500.00 | 2024.05.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஏப்ரல் 26 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

### மருத்துவ உபகரண துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Extracorporeal Shock Wave Lithotripsy | 01 | 180.00 | 35000.00 |
| 02 | CTG Machine | 40 | 12.00 | 3500.00 |
| 03 | Temperature Sensors for Infant Incubator | 150 | 2.00 | 500.00 |
| 04 | SPO2 Sensors for Pulse Oximeters | 1750 | 12.00 | 500.00 |
| 05 | Rechargeable Battery Packs for Infusion Pumps | 120 | 2.00 | 500.00 |
| 06 | Rechargeable Battery Packs for Syringe Pumps | 190 | 2.00 | 500.00 |
| 07 | Spare Parts for Infusion Pump | 380 | 8.00 | 500.00 |
| 08 | Infrared Lamp Bulbs | 250 | 3.00 | 500.00 |
| 09 | ECG Cables for Patient Monitors | 3000 | 12.00 | 500.00 |
| 10 | Accessories for CTG Machines | 470 | 24.00 | 500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-04-25ஆம் திகதி முதல் 2024-05-15ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக்குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-05-16ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-08-15ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2024-09-12ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10**



## மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண்

# முதல் போட்டியில் இலங்கை அணி இன்று தாய்லாந்துடன் பலப்பரீட்சை

மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் முதல் போட்டியில் இலங்கை மகளிர் அணி இன்று (25) தாய்லாந்து மகளிர் அணியுடன் ஆடவுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இன்று ஆரம்பமாகும் இந்தத் தொடரில் மொத்தம் 10 அணிகள் பங்கேற்பதோடு தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணிகளே மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும்.

இந்தத் தகுதிகாண் தொடரில் பங்கேற்கும் பத்து அணிகளும் தலா ஐந்து அணிகளாக பிரிக்கப்பட்டு ஆரம்ப சுற்றில் ஆடும். தொடர்ந்து இரு குழுக்களிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் இலங்கை மகளிர் அணி ஏ குழுவில் இடம்பெற்றிருப்பதோடு இந்தக் குழுவில் தாய்லாந்துடன் ஸ்கொட்லாந்து, உகண்டா மற்றும் அமெரிக்க அணிகள் இடம்பெற்றுள்ளன. பி குழுவில் அயர்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், வனுவாட்டு மற்றும் சிம்பாப்வே அணிகள் உள்ளன.

இந்நிலையில் இந்தத் தொடருக்காக இலங்கை அணி நேற்று முன்தினம் (23) ஆடிய இரண்டாவது பயிற்சிப் போட்டியிலும் இலகு வெற்றி பெற்றது. வனுவாட்டு அணிக்கு எதிரான இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய வனுவாட்டு அணியை 17 ஓவர்களில் 58 ஓட்டங்களுக்கு சுருட்ட இலங்கை மகளிரால் முடிந்தது.

இதன்போது வனுவாட்டு அணியின் ஒரு வீராங்கனை மாத்திரம் 12 ஓட்டங்களுடன் இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றிருந்தார். 15 வயது சுழற்பந்து வீராங்கனை ஷஷினி கிம்ஹானி 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு உதேஷிகா பிரபோதனி, அச்சினி குலசூரிய மற்றும் இனோகா ரணவீர தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 8.2 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கான 59 ஓட்டங்களை பெற்றது. ஹசினி பெரேரா ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களை பெற்றார்.

முன்னதாக நெதர்லாந்து மகளிர் அணிக்கு எதிரான முதல் பயிற்சிப் போட்டியிலும் இலங்கை மகளிர் அணி இலகு வெற்றியீட்டியது.

இந்தத் தொடரில் பங்கேற்றிருக்கும் அணிகளில் பலம் கொண்ட அணியாகவே சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை மகளிர் அணி களமிறங்கியுள்ளது. எனினும் மகளிர் கிரிக்கெட்டில் தாய்லாந்து அணி உலகத் தரவரிசையில் 12 ஆவது இடத்தில் இருப்பதோடு ஒரு டி20 சர்வதேச போட்டியில் இலங்கை அணியையும் தோற்கடித்துள்ளது.

இந்நிலையில் அபூதாபியில் நடைபெறும் இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று மாலை 4.30க்கு ஆரம்பமாகும்.

மகளிர் உலகக் கிண்ண டி20 போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதத்தில் பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.

# அமெரிக்காவில் டிக்டொக் தடை: செனட்டில் உறுதி



அமெரிக்காவில் டிக்டொக் செயலிக்கு தடை விதிக்கக் கூடிய சர்ச்சைக்குரிய சட்டமூலத்திற்கு அமெரிக்க செனட் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதன்படி டிக்டொக்கின் சீன உரிமையாளரான பைடான்ஸ், தனது பங்குகளை ஒன்பது மாதங்களுக்குள் விற்க வேண்டும் அல்லது அந்த செயலி அமெரிக்காவில் தடைக்கு உள்ளாகும்.

இந்த சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்பட தற்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் கையொப்பத்தை எதிர்கொண்டுள்ளது. விரைவில் அதில் கைச்சாத்திடப்போவதாக பைடன் ஏற்கனவே உறுதி அளித்துள்ளார். இதற்கு உடன் பதில் அளிப்பதை தவிர்த்திருக்கும் பைடான்ஸ் நிறுவனம், டிக்டொக்கை வலுக்கட்டாயமாக விற்கும் முயற்சியை எதிர்ப்பதாக முன்னதாக குறிப்பிட்டிருந்தது.

இந்த செயலியை விற்பதற்கான எந்த ஓர் உடன்படிக்கையும் சீனாவின் ஒப்புதலை பெற வேண்டி இருப்பதோடு இவ்வாறான எந்த ஒரு நடவடிக்கையையும் எதிர்ப்பதாக சீனா குறிப்பிட்டுள்ளது. இந்த செயற்பாட்டுக்கு பல ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்ப பிரிட்டனில் சட்டம்



தஞ்சக்கோரிக்கையாளர்களை ருவாண்டாவுக்கு நாடுகடத்தும் பிரிட்டனின் திட்டம் அந்நாட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டத்தின்படி பிரிட்டனுக்கு சட்ட விரோதமாக வரும் தஞ்சக்கோரிக்கையாளர்கள் ருவாண்டாவுக்கு அனுப்பப்படுவார்கள். இவர்களை அனுப்பும் முதல் விமானம் ஜூலை ஆரம்பத்தில் புறப்படும் என்று பிரதமர் ரிஷி சுனக் உறுதி அளித்துள்ளார்.

சிறு படகுகளில் ஆங்கில கால்வாயை கடந்து பிரிட்டனில் தஞ்சம் கோருவோர் எண்ணிக்கை அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. வறுமை மற்றும் போர் காரணமாகவே பெரும்பாலானவர்கள் இவ்வாறு தஞ்சம் கோருகின்றனர். இந்த அபாயப் பயணத்தை தடுப்பது மற்றும் ஆட்கடத்தல் வலையமைப்பை தகர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரிட்டன் அரசு குறிப்பிட்டுள்ளது. எனினும் உரிமைக் குழுக்கள் இந்த நடவடிக்கையை கடுமையாக சாடி வருகின்றன.

ருவாண்டாவுக்கு அகதிகளை ஏற்றிய முதல் விமானம் 2022 ஜூனில் புறப்படவிருந்தபோதும் ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் கடைசி நிமிடத்தில் அதனைத் தடுத்ததோடு இந்த நாடுகடத்தல் திட்டம் சட்டவிரோதமானது என்று பிரிட்டன் உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு அறிவித்திருந்தது.

# இஸ்ரேல் இராணுவ உதவி: அமெரிக்க செனட் ஒப்புதல்



உக்ரைன், இஸ்ரேல் மற்றும் தாய்வானுக்கு இராணுவ உதவிகளை வழங்குவது உட்பட 95 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவித் திட்டத்திற்கு அமெரிக்க செனட் சபையில் ஒப்புதல் கிடைத்துள்ளது.

ஏற்கனவே பிரதிநிதிகள் சபை அங்கீகரித்த இந்தத் திட்டம் ஜனாதிபதி ஜோ பைடனின் கையொப்பத்தை அடுத்து செயற்படுத்தப்படவுள்ளது. இதில் ஒரு வாரத்துக்குள் அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் ரஷ்யாவுடன் போர் புரியும் உக்ரைனுக்கான 61 பில்லியன் டொலர் இராணுவ உதவியும் அடங்கும்.

அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற வாக்கெடுப்பில் செனட் சபை 79–18 என்ற வாக்குகளால் இதனை நிறைவேற்றியது.

இதில் ஏற்கனவே ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவிடம் இருந்து பல பில்லியன் டொலர் பாதுகாப்பு உதவியை பெற்றுவரும் இஸ்ரேலுக்கான உதவிகள் விபரம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

எனினும் இந்த இராணுவ உதவி எதிரிகளுக்கு வழங்கும் வலுவான செய்தியாக உள்ளது என்று இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# ரபா மீது இஸ்ரேல் விரைவில் படை நடவடிக்கைக்கு திட்டம்

## பொது மக்களை வெளியேற்ற கூடாரங்கள் அமைப்பு



காசாவில் பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருக்கும் ரபா மீது இஸ்ரேல் இராணுவம் 'மிக விரைவில்' படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருப்பதோடு அங்குள்ள பலஸ்தீனர்களை வெளியேற்றுவதற்கான திட்டத்தையும் அது முன்னெடுத்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் ரபாவில் இருந்து வெளியேற்றப்படும் பலஸ்தீன பொதுமக்களுக்காக ஆயிரக்கணக்கான கூடாரங்களை இஸ்ரேல் வாங்கி இருப்பதாக இஸ்ரேலிய வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த அரை ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவரும் போர் காரணமாக எகிப்து எல்லையை ஒட்டி இருக்கும் ரபாவில் தஞ்சமடைந்துள்ள பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது ஒரு மில்லியனைத் தாண்டியுள்ளது.

இங்கு எஞ்சியுள்ள ஹமாஸ் படைப் பிரிவுகளுக்கு எதிராக படை நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் இஸ்ரேல் தொடர்ந்து கூறி வருகிறது. எனினும் அவ்வாறான படை நடவடிக்கை பெரும் அழிவை ஏற்படுத்தும் என்று இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா உட்பட உலக நாடுகள் கவலை வெளியிட்டு வருகின்றன.

இங்குள்ள அகதிகள் எகிப்தின் சினாய் பகுதிக்குள் ஊடுருவுவதற்கு அனுமதிப்பதில்லை என்று எகிப்து குறிப்பிட்டிருக்கும் நிலையில் இந்த மக்கள் எங்கு செல்வார்கள் என்ற கவலையும் அதிகரித்துள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அமெரிக்காவுடன் பல வாரங்கள் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின், ரபாவில் இருந்து வெளியேற்றப்படும் பலஸ்தீனர்களுக்காக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு 40,000 கூடாரங்களை வாங்கியுள்ளது. இதில் ஒவ்வொன்றிலும் 10 தொடக்கம் 12 பேர் வரை தங்க முடியுமாக உள்ளது என்று இஸ்ரேலிய அரச தரப்பு தெரிவித்துள்ளது.

ரபாவில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கான் யூனிஸ் நகரில் வெள்ளை நிறத்திலான சதுர வடிவ கூடாரங்கள் வரிசையில் அமைக்கப்பட்டிருக்கும் வீடியோ ஒன்று இணையதளத்தில் பரவியுள்ளது.

இந்த கூடாரம் அமைக்கப்பட்ட நிலம் ஏப்ரல் 7 ஆம் திகதியன்று வெற்றி நிலமாகக் காணப்படுவது செய்மதி நிறுவனமான மக்சார் எடுத்த படங்கள் காட்டுகின்றன. இது தொடர்பில் கருத்துக் கூற இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு மறுத்ததாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கூறியது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் போர் கால அமைச்சரவை எதிர்வரும் இரண்டு வாரங்களில் கூடி பொதுமக்களை வெளியேற்றுவதற்கான ஒப்புதல் அளிக்க திட்டமிட்டிருப்பதாக இஸ்ரேலிய அரச வட்டாரத்தை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது. ரபா படை நடவடிக்கையின் முதல் கட்டமாக பொதுமக்களை வெளியேற்றுவதற்கு ஒரு மாதம் எடுத்துக் கொள்ளும் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பில் நெதன்யாகு அலுவலகம் உடன் எந்த பதிலும் அளிக்கவில்லை.

இந்நிலையில் அமெரிக்காவுடனான பிரச்சினைக்கு மத்தியில் பல வாரங்கள் பிற்போடப்பட்ட ரபா நடவடிக்கை 'மிக விரைவில்' இடம்பெறும் என்று இஸ்ரேலிய அரச தரப்பை மேற்கோள் காட்டி இஸ்ரேலில் அதிகம் விற்பனையாகும் ஹயோம் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இஸ்ரேலின் ஏனைய செய்திப் பத்திரிகைகளும் இதனையொத்த செய்தியை வெளியிட்டுள்ளன.

ரபா மீதான படை நடவடிக்கை ஒன்றுக்கான சமிக்ஞையை இஸ்ரேல் இராணுவம் அண்மைக் காலத்தில் வெளியிட்டு வருகிறது. 'வடக்கில் ஹமாஸ் கடுமையாக தாக்கப்பட்டது. காசா பகுதியின் மத்தியிலும் அது தீவிரமாக தாக்கப்பட்டது. ரபாவிலும் கூட விரைவில் கடுமையாக தாக்கப்படும்' என்று காசாவில் செயற்படும் 162 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் இட்சிக் கோஹன், இஸ்ரேலின் அரச தொலைக்காட்சி ஒன்றுக்கு கடந்த செவ்வாயன்று குறிப்பிட்டிருந்தார்.

ரபா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களும் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன. தெற்கு ரபா நகரில் வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் மூன்று குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்டு மேலும் நால்வர் காயமடைந்ததாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

ஏற்கனவே இடம்பெயர்ந்து ரபாவை அடைந்திருக்கும் பலஸ்தீனர்கள் மற்றொரு வெளியேற்றம் கடுமையானதான அமையும் என்று அஞ்சுகின்றனர்.

பாடசாலை ஒன்றில் தனது குடும்பத்துடன் தற்காலிக முகாமில் இருக்கும் 30 வயதான அயா என்பவர், பெரும் ஆபத்து பற்றி அஞ்சுவதாக தெரிவித்துள்ளார். துறைமுகப் பகுதியான அல் மவாசியில் இருந்து அண்மையில் இந்த முகாமுக்கு வந்த சில குடும்பங்கள் வசிக்கும் கூடாரங்களுக்கு அருகில் ஷெல் குண்டுகள் விழுந்ததை அடுத்து அவை தீப்பற்றிக் கொண்டதாக தெரிவித்துள்ளார்.

'ரபாவில் இருந்து வெளியேறுவது தொடர்பில் நாம் முடிவு ஒன்றை எடுக்க வேண்டி உள்ளது. ஏனென்றால் ஆக்கிரமிப்பு திடீரென்று இடம் பெறக் கூடும் என்பதோடு நாம் தப்பிப்பதற்கு நேரம் இருக்காது என்று நானும் எனது தாயும் அஞ்சுகிறோம்' என்று அந்தப் பெண் குறிப்பிட்டார். 'நாம் எங்கு போவது?' என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

காசாவில் 201 ஆவது நாளாகவும் நேற்றும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருந்தன. அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 34 ஆயிரத்தை தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் 200 ஆவது நாளை எட்டிய நிலையில் ஹமாஸ் ஆயுதப் பிரிவு பேச்சாளர் அபூ உபைதா கடந்த செவ்வாயன்று (23) வெளியிட்ட உரை ஒன்றில், 'இந்த போரில் இஸ்ரேல் அவமானத்தையும் தோல்வியையும் மாத்திரமே சந்தித்துள்ளது' என்றார்.

இதேவேளை இஸ்ரேலிய படை வாபஸ் பெற்ற கான் யூனிஸ் நகரின் நாசர் மருத்துவமனை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய புதைகுழி ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை தற்போது 300ஐ தாண்டியுள்ளது.

இந்த புதைகுழி தொடர்பில் அமெரிக்கா கவனத்தை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் விபரத்தை தரும்படி இஸ்ரேல் அரசை அமெரிக்க அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

காசா போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றம் தீவிரம் அடைந்திருப்பதோடு வடக்கு ஹெப்ரூனில் நேற்றுக் காலை இஸ்ரேலிய படையினால் 20 வயது யுவதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டதை அடுத்தே இந்தப் பெண் சுடப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

தலையில் சுடப்பட்ட அந்தப் பெண்ணின் உடலை தமது பிடியில் வைத்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவை அடுத்து அவுஸ்திரேலியாவிலும் பலஸ்தீன ஆதரவு பல்கலைக்கழக போராட்டம்




அமெரிக்க பல்கலைக்கழகங்களில் நூற்றுக்கணக்கான பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள முன்னணி பல்கலைக்கழகத்திலும் பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டம் பரவியுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகங்களில் முகாம் அமைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காசா போர் தொடர்பில் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு வெளியிட்டு வரும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க பல்கலைக்கழகங்களில் இஸ்ரேலுடனான நிதி தொடர்புகளை துண்டிக்கவும் வலியுறுத்தி முகாம் அமைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதே வகையில் அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட மாணவர்களும் சிட்னி பல்கலைக்கழகத்தில் முகாம் அமைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் கொலம்பியா பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டம் நடத்திய 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்தே அமெரிக்க பல்கலைக்கழகங்களில் பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பட்டங்கள் பரவியதோடு அது தற்போது மிகப் பெரிய இயக்கமாக மாறியுள்ளது.

பல்கலைக்கழக வளாகங்களில் மாணவர்கள் சிறிய குடில்களை அமைத்து அங்கேயே தங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் மூலம் மாணவர்கள் போராட்டம் மிகப் பெரிய அளவில் தீவிரம் அடையும் சூழல் ஏற்பட்டுள்ளது.

# பிலிப்பைன்ஸ்–அமெரிக்க இராணுவம் கூட்டு பயிற்சி




பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு படையினரும் அமெரிக்க இராணுவத்தினரும் இருதரப்பு கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் (23) ஆரம்பமான இப் பயிற்சி எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி வரை இடம்பெறும் என்று பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

அவுஸ்திரேலிய பாதுகாப்பு படையினரும் பிரான்ஸ் கடற்படையினரும் முதற்தடவையாக பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.